1668

1668
2-55

"போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்து என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# தென்றல்

198328
சென்னை-600 008

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 1 | சென்னை | 11—6—55 | சனிக்கிழமை | இதழ் 50

# புலம்பி அழுகிறார்! புழுங்கிச் சாகிறார்!

"ஐயோ, கண்ணா, நீ காட்டிய வழியிலே சென்று பார்த்தேன். வியாசர் பெருமானே நீர் தந்த விருந்தை சுவைத்துப் பார்த்தேன். பயன் கிட்டவில்லை பிரபுக்களே! சிந்திக்கமுடிந்த நாள் முதலாக சிந்தித்துக் கொண்டுதானிருக்கிறேன். அரிச்சுவடி தெரிந்த ஆண்டிலிருந்து எழுதிக்கொண்டிருக்கிறேன். எண்ணம் ஈடேறவில்லை என் தெய்வங்காள்! ஆசை பலிக்கவில்லை பரமாத்மாக்களே! சட்ட மறுப்பு காலத்திலிருந்து தான் நான் பாடுபடுகிறேன்; திருப்பரங்குன்றத்திலே என்னைத் திருப்பி அனுப்பியும் நான் திடமிழந்துவிடவில்லை. 1938லிருந்து நான் மேற்கொண்ட பணிகள் எண்ணிடங்காதவை! இப்போது எண்ணிப் பார்த்தாலும் நெஞ்சை அதிரிடச் செய்யக் கூடியவை! அத்தனையும் என் நலனுக்கா செய்தேன்; என் சந்ததிக்காகச் செய்தேன்; பார்ப்பனகுல நல்வாழ்வுக்காகச் செய்தேன். புதிய கல்வித்திட்டம் புதிதாகச் செய்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள். சட்டமறுப்பு இயக்க காலத்தில் அல்லாடியைய அழைத்து 'நீர் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம்' என்று நான் சொன்னதிலிருந்தே தெரிந்துகொண்டிருக்க வேண்டாமா? ஆனல் அந்தப் பலனையெல்லாம் காலக்கிரமத்தில் அனுபவித்து விட்டேன். நான் செய்த சூதுக்கும், தீவினைகளும், என் அரசியல் வாழ்விலே எனக்குக் கிடைத்த தோல்விகளே நல்ல பரிசுகளாகும். முதல் இந்திஎதிர்ப்பிலே பலத்த மூக்குடைபட்டேன். அப்போதிருந்த மூளுக்கு 'இந்தி'யைக் கட்டித் தழுவச்செய்தது. அப்போதிருந்த பேராதை தமிழ் மக்களை உதாசீனப்படுத்தத் தூண்டியது. ஆனல், அதே இந்தி சம்பந்தமாக, அதே திராவிடத் தலைவர்களிடம் தோல்வியை இன்று ஒப்புக்கொண்டேன். எனக்கு, நல்ல மூளை என்று சொல்லுகிறார்கள்; நல்ல புத்திசாலி என்று புகழ்கிறார்கள்; ஆனல் இந்தப் புத்திசாலி கொண்டுவந்த திட்டம் ஒன்றுமே உருப்படியாகவில்லை யென்பதை இன்னும் யாரும் அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை--ஒரு சிலரைத் தவிர. எதையாவது, எப்போதும் செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற தத்துவம்தான் என் வாழ்வை நசுக்கிவிட்டது. எனது கௌரவத்தை எரித்துவிட்டது; அந்தஸ்தைக் கொன்றுவிட்டது. என் வரலாறு தெரிந்தவர்கள். இதை உணர்ந்திருப்பார்கள். அதிகாரம் என் கையில் இருந்த காலத்தில் அதை வைத்துக்கொண்டு பல விஷமத்தனங்கள் செய்திருப்பேன்; அதைத் துறந்து--துரத்தியடிக்கப்பட்டு தேடுவாரற்று 'ஜெபமாலை' உருட்டிக் கொண்டிருக்கும் காலத்தில் ஆத்மார்த்தக் குழப்பங்களை கிருஷ்டித்திருப்பேன். அரசியல் வியவகாரங்களில் எனக்கு தோல்வி கிட்டிய சமயங்களிலெல்லாம், உலகிலுள்ள எந்த நாட்டு அரசியல்வாதிகளும் மேற்கொள்ளாத பணிகளைக் கூட ஏற்றுச் செய்திருக்கிறேன். துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் துணை கொண்டு ஆட்சி நடத்திவிட்டு அதிகாரத்தை இழந்துவிட்ட பிறகு எந்த நாட்டு அரசியல் தலைவனாவது வேதப் புத்தகங்களை கையிலெடுத்துப் புலம்பியதுண்டா? நான் செய்தேன் அப்படி! சட்டத்தை நம்பாதீர்கள்; சர்வேஸ்வரனை நம்புங்கள் என்று எழுதியதுண்டா? நான் எழுதினேன் அதுபோல! காரணம் எனக்கு வேறு வேலையில்லை; அதனல் செய்தேன்; எந்த நேரமும் மக்கள் மத்தியிலே நமது பேர் அடிபடவேண்டும், அட்லியைப் போல, சர்ச்சிலைப்போல, அதற்காக அப்படி உலவினேன். யாருக்குத் தெரியும் இந்த மர்மம்; எல்லோரும் புகழ்பாடினார்கள் "நம்ப ராஜாஜி சாமான்யரா?" என்று: எனக்கல்லவா தெரியும் எனது வேதனை.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று நாள்தோறும் நான் சொல்லிக் கொண்டுதானிருக்கிறேன்; பிறருக்கு! அந்தத் தத்துவம் எவ்வளவு பித்தலாட்டமானது என்பதற்கு என் வாழ்க்கையே பெரியதொரு சான்றாயிற்றே! கடவுளை நம்பி நான் என்ன வாழ்ந்து விட்டேன். கவர்னர் பதவிக்குப் போனேன் அங்கேயும் எதிர்ப்பு; இதை அறிந்த நேரு என்னை கவர்னர் ஜெனரலாக்கினர். அங்கேயும் அதிருப்தி! நல்லவேளை போல மாம்பலத்திலே தூங்கிக்கொண்டிருந்தேன். எப்படியோ கவர்னர் அதிகாரத்தின்பேரில் சென்னை முதல் மந்திரியானேன்; அடராமா, நான் கொல்லைப்புரம் வழியாக முதல் மந்திரியானதும் போதும் எதிர்க்கட்சிக்காரர்கள் என்னை சந்தி சிரிக்க வைத்ததும் போதும். உலகமே சிரித்ததே என் செயல் கண்டு! ஜனநாயகவாதிகளெல்லாம் பொறுமிப் போனார்களே. வினை விதைத்தேன்; வினையை விரைவிலே சாகும்படி செய்துகொண்டேன். கடவுளை நம்பி நான் என்ன வாழ்ந்துவிட்டேன். சட்டசபையிலே கூடத் தான் தெய்வங்களை வேண்டிக் கொண்டேன்; என்ன செய்துவிட்டார் அந்த ஸ்ரீராமன். அவமானத்தைத் தேடித் தந்தார்! அகௌரவத்தை வாங்கிக் கொடுத்தார். அப்படியிருந்தும் என் இன்னும் சக்ரவர்த்தித் திருமகனை எழுதிக்கொண்டிருக்க வேண்டும் என்று கேட்பீர்கள். அங்கே தான் சூழ்ச்சி மறைந்து கிடக்கிறது. என்னைப் பொருத்த வரையில், இந்த வையத்தில் இன்னும் என் சொல்லுக்கு ஏதோ ஒரு சக்தி இருப்பதாக நான் அறிகிறேன். என்னுடைய வார்த்தைகளை பத்திரிகைகள் பெரிதாக்கிவிடுகின்றன; அதைப் பார்க்கும் அரசியல் தலைவர்கள் என் பேச்சுக்களை 'பிரச்சினை'களாக்கி விடுகிறார்கள். நான் இந்தியைப்பற்றிச் சொன்னேன்; டில்லிவாழ் பந்த் ஆடித்துப் போனர்; அணுகுண்டைப் பற்றி எழுதினேன்; அமெரிக்காவே கலங்கிவிட்டது. பி. சி. ஜி. பற்றிக் கூறினேன்; எங்கு பார்த்தாலும் அதே பேச்சாய் விட்டது. அதேபோல "கடவுள் நம்பிக்கை எனக்கில்லை" என்று சொல்லி விட்டால் என்னாவது? எனக்காக--எனது அன்புக்காக--முகஸ்துதிக்காக பஜனைபாடும் பணக்காரப் பக்தர்கள்கூட, நான் ஆண்டவனை நம்பவில்லை என்று தெரிந்து விட்டால் அவர்களெல்லாம்--அந்தப் பணக்காரர்களெல்லாம் பகிரங்கமான நாஸ்திகப் பிரசாரத்தில் இறங்கிவிடுவார்கள். கடவுளைப்பற்றி அதிகம் நினைக்காத காமராஜநாடாருக்கு கிடைக்கின்றவெற்றிகள்கூட சதாசர்வகாலமும் தியானத்திலே இருக்கிற எனக்குக் கிடைக்காவிட்டாலும், நான் ஆண்டவனைப்பற்றி 'பதிகம்' பாடிக்கொண்டிருப்பதின் மர்மமே, எனது குல வாழ்வுக்காகத்தான், ஆரியவர்க்கத்தின் நலனுக்காகத்தான்; என்னுடைய உயிருள்ளவரைக்கும்தான் எம்குலத்தார் மகிழ்வோடிருக்க முடியுமோ என்ற அச்சம் வேறு என்னை உலுக்கிக் கொண்டிருக்கிறது; அதனல்தான்--அந்த அச்சமும், அதே நேரத்தில் கடவுள் நம்பிக்கையற்ற தன்மையும் என்னைக் கவ்விவிட்ட காரணத்தால் தான்-என்னை அறியாமல் "கடவுள், கடவுள்" என்று புலம்பி அழுகின்றேன்; புழுங்கிச் சாகின்றேன். அன்பு காட்ட மறுப்பவனை நாம் கெஞ்சுவதில்லையா? அதைப் போலத் தான், கடவுளுக்காக, "கல்லில் கடவுளை இல்லையென்போர் முட்டாள்" என்று சென்ற வாரம் ஒரு ஆதீனத்தின் விருந்தில் மயங்கிக் கூறிவிட்டேன். இந்த உலகில் கல்லில் கடவுளை இல்லையென்று கண்டவனும் நான்தான், கடவுளை நம்பி ஏமாந்தவனும் நான்தான். இது யாருக்குத் தெரியப் போகிறது; தெரியாது; தெரிந்துவிடும்படி நடந்துகொள்ளமாட்டேன். என்னுடைய நாதத்திலே நயமிருந்தாலும் இல்லாவிட்டாலும்; ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் என் சுற்றத்தாரின் சுகவாழ்வுக்காகவாவது நான் கடவுள் பெயரைச் சொல்லித்தானாகவேண்டும். வேறு வழி?"

M241.N54TL
N54:1:57

# எரிமலைகள் !

"வால்கானேஸ்" என்னும் ஆங்கிலேய பதத்திற்குத் தழல் சாம்பல் புகை முதலியவைகளைக் கக்கும் எரிமலைகளென்று அர்த்தம். சில மலைகள் மண்ணைக் கக்குகின்றன. இம்மலைகளுக்குப் புராதன உரோமர்கள் அக்கினி என வணங்கிய வல்கன் என்னும் தேவதையின் காரணமாய் இப்பெயருண்டாயிற்று. இந்தியாவில் "விஸ்வகர்மா" வென்னும் தெய்வ கருமானைப்போல் அங்கே வல்கான் எனனும் தெய்வம் தேவர்களுக்கு ஆயுதம் செய்கிறவன். வல்கான் தேவதையின் தொழிற்சாலைசிஸிலியிலுள்ள எத்னா என்னும் எரிமலையின் கீழிருப்பாதாகவும், அத்தேவதை நெருப்பு மூட்டும்பொழுது புகை, தழல் முதலியவை மலையுச்சியினின்று வெளிப்படுகிறதாகவும் எண்ணினார்கள். இதினாற்றான் உலகிலுள்ள எல்லா எரிமலைகளுக்கும் "வால்கானேஸ்" என்று பெயரிட்டார்கள்.

இந்தப் பூமி முதலில் சூரியனின்று உண்டாகிய எரிமேகத்திரட்சியென்று சில காரணங்களால் எண்ண இடமுண்டு. வரவர அவ்வெரி மேகங்கள் குளிர்ந்துபோனவுடன் இப்பொழுது இருக்கிறதுபோல பூமியாயிற்று. பூமியின் உட்புறத்தின் மையத்தில் இன்னும் அனேக தழற்கட்டிகளிருக்கின்றன. இதின் உண்மை பூமியின் பல இடங்களில் எரிமலைகளும் வெந்நீரூற்றுகளும் இருப்பதினால் நன்கு விளங்கும். இஃதன்றியும் நாம் பூமியினுட் செல்லச்செல்ல அதி உஷ்ணம் அதிகரிக்கிறது. மிகவும் ஆழ்ந்தசுரங்கங்களில்அதிகஉஷ்ணமாயிருக்கிறபடியால் சுரங்க மறுக்கிறவர்கள்தங்கள் உடுப்பையெடுத்துவிடுகிறார்கள். பூமியினுள் மூன்று மைலுக்குக்கீழ் கொதிக்கிற தண்ணீரினளவு வெப்பமாயிருக்கும்.

எரிமலையின் உச்சியில அக்கினி கொர்ப்பவாய் என்று சொல்லப்பட்ட ஒரு பிளவு உண்டு. அதன் வழியாய் பூமிக்குள் ஒரு பெரிய வளை போகும். அதன் வழியாய் பூமிக்குள்ளிருந்து யெரிகிற வஸ்துக்கள் வெளியே கொண்டுவரப்படுகின்றன.

ஒரு எரிமலை உருவத்தில் பெரிதாகும் பொழுது அதின் பக்கத்தில் பலவீனமரான பாகங்களில் வெடிப்புகள் உண்டாகி அவைகளுக்குள்ளிருந்து எரியும் வஸ்துக்கள் வெளியே வந்து சிறு சிறு எரிகுன்றங்களாகின்றன.

எரிமலைகளில் வெடிப்புண்டாக கொஞ்சநேரத்திற்குமுன் வெகு தூரத்திலுண்டாகிற இடிமுழக்கத்தைப்போல் ஒரு மைல் கேட்கும். பூமி கொஞ்சம் அதிரும். அதிர்ச்சியும் சத்தமும் வரவர விருத்தியாகி ஒரு பெரிய வெடி உண்டாகிறது. கடைசியாய் மண்ணும் நீராவியும் அம்மலைக்குள்ளிருந்து வெகு வேகமாய் ஆகாயத்தில் திரள்திரளாய்க் கிளம்புகின்றன. சில சமயங்களில் அவ்விதமாய்க் கிளம்புகிற மெல்லிய மண் அதிக விசேஷமாயிருக்கிறபடியால் ஆகாயத்தில் அனேக மைல் தூரம் பறந்து கறுத்துத் தோன்றும். மேற்சொல்லிய மண்ணேயல்லாமல் பழுக்கக் காய்ந்த கற்களும் வெளியே எரியப்பட்டு அதைச் சுற்றிலும் அனேக மைல் தூரம் பரவி விழுகின்றன.

முதலில் வெடி உண்டானவுடன் எரிமலையின் உச்சியிலிருந்தும் அம்மலையின் பக்கங்களிலுள்ள வெடிப்புகளிலிருந்தும் கல் உருகி வழியும். உருகிய அந்த வஸ்து மலையின் பக்கங்களில் நீரருவியைப்போல் பாய்ந்து ஓடுவதினால் "சிற்றாறு" என்னும் அர்த்தத்தைக் கொடுக்கிற ஒரு இத்தாலிய வார்த்தையிலிருந்து வந்த "லாவா" என்னும் பெயர் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கினறது. முதலில் லாவா தாராளமாயோடி உருக்கிய இரும்பைப்போல் தளதளவென்று வெண்மையாயும் மிகக் காந்தியாயும் பிரகாசிக்கும். பின்பு வரவரச் சிவந்து பூமியின் மேற்புறத்தில் ஓடுபோல் இறுகிக்கறுத்து பாறையாகிவிடும். ஆயினும் அப்பாறையின் இடையிடையேதோன்றுகிற வெடிப்புகளிற் பார்த்தால் உட்புறம் சிவந்து தோன்றும். இவ்வெரிவெள்ளத்தால் அநேக வீடுகளும் மரங்களும் நாசமாக்கப்படுகின்றன.

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னே விசூவியஸ் மலையின் உச்சியில் அநேக மரங்களடர்ந்து கண்ணுக்கு இனிமையாக விருந்தது. முதலில் அடுத்தடுத்துப் பூகம்பங்கள் உண்டாயின. கி. பி. 79-ம் வருஷத்தில், அம்மலையினுச்சியில் என்றுங் காணப்படாத ஒரு பெரிய மேகத்திரட்சி தங்கியிருப்பது போற்றோன்றிற்று. இப்படியிருக்கச் சற்று நேரத்திற்கெல்லாம் திடீரென்று நீராவி சாம்பல் கல் முதலியவைகளெல்லாம் கலந்து ஆகாயத்தில் சுமார் 1,200 அடிகளுக்குமேல் போகும்படி எறியப்பட்டன. நீராவி மேகம் சுற்றிலும் அநேக மைல் தூரம் சென்று பரவியது. எரிசாம்பலும் கற்களும் சரமாரியாய்க் கீழே விழுந்தன. வெளியே எறியப்பட்ட சாம்பலும் மற்ற வஸ்துக்களும் அதிகமாயிருந்தபடியால் மூன்று நகரங்கள் புதையுண்டு போயின. சில இடங்களில் 30 அடி உயரம் படிந்தது. இதற்குப்பின் 1,700 வருஷங் கழித்து அந்நகரங்களின் சில பாகங்களைப் பரிசோதித்துப் பார்த்த பொழுது வீடுகள் இடியாமல் நின்றுகொண்டிருப்பதையும் சுவரில் எழுதிய சித்திரம் புதிதாக எழுதினதுபோலழியாமலிருப்பதையும், ஜனங்கள் இறந்துபோன இடங்களில் அங்கங்கே எலும்புக்கூடுகள் கிடப்பதையும் கண்டார்கள்.

**எரிமலைகள் பற்றிய சுவை மிக்க கட்டுரை இது. எரிமலைகளின் உற்பத்தி குறித்தும், அதன் நெருப்புக் குழம்பின் சாதக, பாதகங்கள் பற்றியும் இந்தக்கட்டுரை நமக்கு விளக்குகிறது. மாணவர்களுக்கு பெரிதும் பயன்படும்.**

இதுவரையில் நூற்றுக்கணக்கான எரிமலைகள் வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. வங்காளக்குடாக்கடலில் அந்தமான் தீவுகளுக்குச் சமீபத்திலுள்ள ஒரு தீவிலுள்ள எரிமலைதான் இவ்விந்தியாவுக்கு அதிக சமீபத்திலுள்ளது. எரிமலைகள் அநேகமாய் பசிபிக் மகாசமுத்திரத்தின் கரையைச் சுற்றி அர்த்தவட்டமாயிருக்கின்றன. இவ்வுலகத்தில் மிக உயரமுள்ளது, அதிக கொடூரமானதுமாகிய கொட்டோபாக்ஸியென்னும் எரிமலை, நிரட்சரேகைக்குச் சமீபத்தில் ஆண்டீஸ் மலைத்தொடரின்கீழ்ப்பாகத்திலிருக்கிறது. அதினுச்சியில் இமயகிரி பர்வதத்திலுள்ளதைப்போல், பனி விசேஷமாய் மூடியிருக்கும். அவ்வக்கினிமலை வெடிக்குமுன்னே உஷ்ணத்தினால் அப்பனிக்கட்டிகளுருகிவிடும்.

சாந்துவிச்சுத் தீவுகளிலொன்றாகிய ஆவேய் என்னும் தீவிலுள்ள கிலாவே என்னும் எரிமலைதான் இவ்வுலகிலுள்ள எல்லா வெரிமலைகளை விடவும் பெரிது. அதன் வாய் 9 மைல் சுற்றளவுள்ளது. அதற்குள் அக்கினிநீர் நிறைந்த பல எரிகளிருக்கின்றன. சிலவேளைகளில் அவ்வேரிகள் சுமார், 30, 40 அடிகளுயரம் குமிழிகொண்டெழும்பும்.

ஆசியாகண்டத்தில் எரிமலைகள் அதிகமாயில்லை. ஆனால் அதற்குச் சமீபத்திலுள்ள தீவுகளில் அநேக எரிமலைகளிருக்கின்றன. சில வருஷங்களுக்குமுன்னே, சுமத்திரா, ஜாவா என்னும் தீவுகளுக்கிடையிலிருக்கிற சந்தாஜலசந்தியில் மிகவும் பயங்கரமான வெடியும், பூகம்பமும் உண்டாயிற்று. அப்பொழுது கிராக்கட்டோவாவென்னும் எரிமலையின் பெரும்பாகம் சமுத்திரத்தில முழுகிப்போயிற்று. ஒரு பெரிய அலை சமுத்திரத்திலுண்டாகி ஆயிர மைல் தூரம் பரவியது. அதினால் ஒரு காற்றலையுமுண்டாகி பூமியைச் சுற்றிலும் வீசியது. அந்த வெடியின் சப்தம் ஐரோப்பாகண்டத்தின் பரப்பளவு முழுதும் பரவிக் கேட்டது. அதினின்று கற்கள் ஆகாயத்தில் முப்பது மைல் உயரம் எழும்பின.

எத்னா, வெசூவியஸ், ஐஸ்லாந்து தீவிலுள்ள எக்ளா முதலானவை ஐரோப்பாவிலுள்ள எரிமலைகளெல்லாவற்றிலும் முக்கியமானவை. ஒருதடவை எக்ளாமலையிலிருந்து உண்டாகிய லாவா 50 மைல் தூரம் ஆறாய் ஓடிப் பாய்ந்ததாம்.

எரிமலைகள் உண்டாவதற்குக் காரணங்கள் அடியில் வருவனவென்று சொல்லுகிறார்கள். பூமிக்குள்ளிருக்கிற அக்கினி பூமிக்கு மேற்புறத்தில் ஸராதபடிக்கு அநேக மைல் கனதியுள்ள கற்பாறையால் மூடப்பட்டிருக்கிறது. சில வேளைகளில், பானையிலுள்ள ஜலம் கொதித்துப் பொங்கி வழிகிறதுபோலவே, பூமிக்குள்ளிருக்கிற உருகிற கற்பாறைகள் பூமி மெலிந்துள்ள இடங்களையுடைத்துக்கொண்டு அடிக்கடி பொங்கி மேலே கொப்பளிக்கின்றன. அவ்வக்கினி வெளியே வெடித்து வருகிற துவாரங்கள்தான் எரிமலைகள். ஜலம் அவ்வக்கினியிருக்குமிடத்திற்குச் செல்லவே மேலெழும்பி வெடிக்கிறதெனச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி தண்ணீர் உள்ளே போகும்பொழுது அங்குள்ள உஷ்ணத்தினால் ஜலம் நீராவியாய் மாறி, அந்நீராவியின் வேகத்தால் அங்கேயுள்ள உருகின வஸ்துக்களெல்லாம் வெளியேகொண்டுவரப்படுகின்றன. அடிக்கடி, நீராவியும் மண்ணும் கலந்துவரும் எரிமலைகளிற் பெரும்பான்மை கடலுக்கருகாமையிலிருக்கின்றன.

சில வேளைகளில் சமுத்திரத்திற்குள்ளிருந்து எரிமலைகள் வெடித்தெழும்புவதினால் அநேக தீவுகளுண்டாகின்றன. அநேக தீவகணங்கள் இம்மாதிரியாய்த்தான் முதலில் உண்டாயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

## தென்றல்

### அடுத்த இதழ்

**முதலாண்டு நிறைவு இதழ்**

★

கதிரன்,
'முரசொலி' மாறன்.
வி. சிவப்பிரகாசம்,
எஸ். எஸ். தென்னரசு
**ஆகியோரின்
கருத்தோவியங்களும்**
ஆசிரியர்
**கண்ணதாசனின்
தொடர் நாடகமும்**

சொல்லின் செல்வர்
**சம்பத் எழுதும்
பொருளாதாரக் கட்டுரையும்
இடம் பெறுகின்றன.**

## பூவாடைக்காரி !

தன் கணவருக்குமுன் செத்துப்போகும் பெண்கள் மலரின் மணத்தை இழக்காமல் சாவதால் அவர்களை பூவாடைக்காரி என்று சொல்லுவார்களாம் அந்த நாட்களில்! அவ்வாறு செத்துப் போனவர்கள் வழிபாட்டுக்குரியவர்களாகவும் கருதப்பட்டு வந்திருக்கிறார்கள். வாழ்கின்ற சுமங்கிலிகள், விதவையாகிப் போனால், சுகபோக வாழ்வு கிடைக்காதே என்று பயந்து மணத்தோடு செத்த பெண்களை தெய்வமாகக் கருதி வணங்கினார்களாம். ஆண்டுக்கொருமுறை ஒரு குறிப்பிட்ட நாளில் புதுப்புடவை வாங்கி, மனையைச் சுத்தி செய்து வீட்டில் சுவர் ஓரத்தில் அச்சேலையை மடித்துவைத்து, பலகாரங்களை அச்சேலைமுன் படைத்து, மலர் சாற்றி, கற்பூர சாம்பிராணி, தூபதீபங் கொடுத்து, மாங்கலியத்தோடு செத்த அந்தப் பெண் அந்தச் சேலையில் பிரசன்னமாயிருப்பதாக பாவித்து "என்னையும் உன்னைப்போல் மாங்கலியத்துடனேயே சாகச் செய்துவிடு, விதவையாக்கிவிடாதே" என்று இளம் பெண்கள் வேண்டிக் கொள்வார்கள். இதற்கு, பூவாடைக்காரியை வணங்குதல் என்று பெயராம்.

இதை யறிந்த ஆரியர்கள், பொருள் கவர எண்ணி, மாதர்களுக்கு துர்ப்போதனை செய்து அவர்கள் குல சுமங்கிலியரை வணங்கிடச் செய்தனர். அந்தக் காலத்தில் விதைக்கப்பட்ட அந்த வினை தான் இன்னும் தைத்திருநாளன்றும், வேறு பலநல்ல நாட்களிலும் தமிழ் பெண்கள் ஆரியகுல சுமங்கிலிகளுக்கு புடவை, புதுமுறம், மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு முதலியன அளித்து பாத காணிக்கையும் தருகின்றனர்.

# எண்ணம்

**கண்ணதாசன்**

புயலின் வேகம் வலிவிழந்துவிட்டது. தூசிக்காற்றை எழுப்புவதை தவிர, வேறு வகையற்று அந்தப் புயல் அடங்கிக்கிடக்கிறது. ஏழை நாணல், எங்கெனும் படர்ந்துகிடக்கும் பச்சைப்புல்வெளி, இவை இரண்டும் கண்ணுக்குப் புலப்படாத தன்னுடைய வச்சிர உறுதியை, மூலபலத்தை சினையாகப் பெற்று, தோற்றுப்போய் தோகைக் கிளைகளின் ஆட்டத்தின் வாயிலாத தன்னுடைய தோல்வியை எண்ணி அழுகுரல் எழுப்பிக்கொண்டிருக்கும் புயலின் 'வெற்றிகர வாபசை' எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டிருக்கின்றன. அதிகார அனல் காற்றை ஆருயிர் நண்பனுக்கிக் கொண்டு, மொழி ஆதிக்க 'மோகனர்'கள் திடீர் புயலாக மாறி திராவிடத்து மைதானத்திலே வீசிப் பார்த்தார்கள். செல்வத்தை இழந்தவர்களானாலும், செங்கோலைப் பறிகொடுத்தவர்களானாலும், மாண்புள்ள திராவிட மைதானத்தின் சக்தியால் ஊறி உளறந்துபோன இலட்சிய பலத்தால் அந்தப் பெரும்புயல் படுதோல்வியடைந்துவிட்டது. அதோ தூரத்தில் தெரிகிற வேப்பங்காற்றின் அசைவு புயலின் தோல்விப் படலத்தை 'முகாரி'யாகப் பாடிக் காட்டுகிறது. நாம் வளர்ந்தோங்கியிருக்கிறோம் என்று பெருமையடித்துக்கொண்டிருந்த தென்னாட்டின் துரோகச் சவுக்குமரங்கள் வேரோடு சாய்ந்து வேதனை குரலை பரப்பிக்கொண்டிருக்கின்றன.

ஆம்; திராவிடத்திலே, குறிப்பாக தமிழகத்திலே இன்று இந்த நிலைதான். ஆதிக்கத்தைக் காட்டி மிரட்டி இந்தி மொழியைத் திணிப்பதில் தோல்வி கண்ட "வடநாட்டுத் துரை"கள் ஆசையைக் காட்டி, உத்தியோகத்தின் பெருமையை முன்வைத்து இந்தி மொழியைத் திணிப்பதிலும் படுதோல்வியடைந்துவிட்டார்கள் என்பதைதிருவிடம் நன்கறியும்; சுயநலம் காரணமாகவோ தற்காலிக சாந்திக்காகவோ, 'அவர்களின்' முகாமிலிருந்தே "இந்தி திணிப்பு"க்கு எதிர்ப்பேச்சு இருந்தது டில்லி சரிந்தது; வெறி, இமயத்திலிருந்து வழுக்கி விழுந்தது. அதனால் ஏற்பட்ட தாக்குதல்களும், அவை பெற்ற வேதனை ஓலமும் 'வல்லவ' பந்த்தின் மறைமுகச் சரணாகதிப் படலமாக தென்புலத்திலே ஒலிக்கிறது. "பயப்படாதீர்கள்; இந்தி பேசாத ராஜ்யத்தினருக்கு பாதகமாக எதுவும் நேர்ந்துவிடாது" என, புதர்கள் நிறைந்த மண்மலையின் ஒற்றையடிப்பாதையென அவருடைய தாழ்ந்த குரல் வளைந்து நம்மை நோக்கி வருகின்றது. அது மட்டுமா அரசியல் சட்டம், நாட்டின் வேதநூல்; அதைத் தீண்டலாமா? ஒரு எழுத்தை மாற்றிப்போட்டாலும் ராஜதுரோகமாயிற்றே என்று அரசியல் நீதி பேசி வீறிட்டுக் கதறிய வெண்விழி ஆந்தைகள் இன்று வீணைக் குரலெழுப்பி, நம்மைத் தட்டிக் கொடுத்து இன்பமூட்டுகிறார்கள். அரசியல் சட்டம் கூறும் கால வரையரைப்படி இன்னும் ஒன்பது வருடத்தில் ஆங்கிலம் அடியோடு ஒழிக்கப்படுவதற்கான நிலை இப்பதை சுதேசமித்திரன் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. "ஒருமொழிக்காகமக்கள் பிறக்கவில்லை: மக்களுக்காகவே எந்த மொழியும் பிறந்திருக்கிறது" என்று பெரியதொரு தத்துவத்தை வேதனையோடு வெளியிட்டிருக்கிறது. இந்தி மொழி ஆதிக்கம் தென்னகத்தில் அறவே கூடாது என்ற நமது கருத்தை சுதேசமித்திரன் அப்படியே ஒப்புக்கொள்ளாவிட்டாலும், வடவரின் மொழித் திணிப்பை அந்த இதழ் நம்மைப்போல கண்டித்திருக்கிறது என்பதை நம்மால் மறுப்பதற்கில்லைதான்.

இந்தக் கிழமையின் துவக்கத்தில் பம்பாய், இந்தி வித்யாபீடப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட பம்பாய் கவர்னர் டாக்டர் அரிகிருஷ்ணமேதாபின் பேச்சு சற்றேனும் சுதேசமித்திரனுக்கு குறைந்ததாக இல்லை. "கட்டளைகள்மூலம் ஒரு மொழி வளர்ச்சி பெறமுடியாது; மொழிப்பிரச்சினை அரசியல் பிரச்சினையல்ல; பெரும்பான்மையோரின் முடிவுப்படி இதனை முடிவுசெய்வது என்ற தத்துவம் இதற்குப் பயன்படாது: இது பெரிதும். சமூக, கலாச்சாரப் பிரச்சினைதான்." என்று பம்பாய் கவர்னர் பேசியிருக்கிறார். சொந்த அரணுக்குள்ளேயே இப்படி ஒரு சொல்லம்பு தன்னை நோக்கி வரும் என்று 'திருவாளர்' பந்த் எதிர்பார்த்திருக்கமாட்டார். மறைக்க முடியாதசில உண்மைகள், உள்ளத்திடம் அனுமதி கேளாமலே உதடுகள் சொல்லிவிடுகின்றன அல்லவா!

முரசறைந்து முழக்கமிட்டு, படைநடத்தி வந்தவர்களே, படிப்படியாக கல்லுக்குக்கல் தொனிகம்மி, முரசிற்கு உறைபோட்டு விட்டு, அதைச் சுமந்துவந்த திமில்பெற்ற மாடுகளின் கழுத்துகளிலேயே கயிறுகளை சுற்றி, வந்த வழியே விரட்டிவிட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், சென்னையின் மாஜி கோபாலர், மாம்பலத்து கோபாலரல்ல; ஆந்திரத்துக் கோபாலர் தானுக தன் முதுகை டில்லிக்கு திருப்பிக்காட்டி தாசானுதாசன் என்று என் முதுகில் எழுதுப்போங்கள் டில்லி ராஜாக்களே, என்று சொல்லியிருக்கிறார். வீற்றிருக்கும் சித்திரக்கூட மஞ்சத்தின் குளுமை, விம்மியழுத சென்ற தேர்தலின் அவருடைய வீழ்ச்சிக் காதையை மிதக்கச் செய்திருக்கிறது. கரிபூசப்பட்டவர்; களி தெலுங்கு மாநில மக்களின் பெருமூச்சில், இருந்த இடம் தெரியாமல் துரும்பாக பறக்கடிக்கப்பட்டவர், அதே கோபாலர்தான் டில்லி துணையின் கனத்தை மக்கள்மனத்தின் கனத்தைக் காட்டிலும் எடைகூடியது என்று தவருக எடைபோட்டுக்கொண்டு இந்தியை ஆந்திரத்தில் கட்டாயப் பாடமாக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார். ஜூன் 6-ந் தேதியன்று விஜயவாடாவில் கோபால் ரெட்டி பேசியிருக்கிறார்." இந்த ராஜ்ஜியத்திலுள்ள, எல்லா பள்ளிகளிலும் சமஸ்கிருதப் படிப்பைக் கட்டாயப் பாடமாக்க நான் விரும்புகிறேன். இந்திய பாஷைகளின் தாய் பாஷைபோல் விளங்கும் சமஸ்கிருதத்தை மாணவர்கள் கற்பது அத்தியாவசியமாகும். ஏனெனில் இந்தியாவின் பண்டைப் பெருமைகளும் கலைச் செல்வங்களும் அந்தப் பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன" என்று. எத்துணை நெஞ்சழுத்தமும் மக்கள்பால் அலட்சியமும் இருந்திருந்தால்கோபாலர்இப்படிச் சொல்லியிருப்பார். தென்னகம் முழுதும் எதிர்த்து வெற்றி பெற்றிருக்கின்றது. ஏசல்பாணம்தொடுத்தோரெல்லாம் வாசல் கதவுகளை மூடிக்கொண்டு உள்ளூர நமது போராட்டத்தை ஆதரிக்கும் நிலைக்கு வந்திருக்கிறார்கள்; இந்த நேரத்தில் வலிய சென்று இந்தியைக் கட்டாயப் பாடமாக்கப் போகிறேனென்றால் அது 'கன' மாகிப் போனதின் விளைவன்றி வேறென்னவாக இருக்கமுடியும்: அந்தக் 'கனம்' காலத்தால் தேயாததல்ல என்பதும், ஜனநாயகம் வடிக்கும் உமிழ்நீர்-நெருப்புக் குழம்பின் சக்தியில் திரவமாகி ஓடிவிடக்கூடியது என்பதும் கோபாலர் அறியாததல்ல, ஏட்டளவில் மட்டமின்றி தானே அனுபவித்தவர். அப்படிக் கற்ற பாடத்தை பெற்றிருக்கிற வடுவை மறந்துவிட்டு அந்தக் கோபாலர் மார்தட்டி நிற்கிறார் இந்திக்காக; டில்லியின் கடைக்கண் வீச்சுக்காக! முதலாண்டு ஜனநாயக மஞ்சு விரட்டில் பிடிபட்டு விருதை இழந்த அந்த எருது மருண்டு மஞ்சுவிரட்டில் 'நின்று பாயும்' காளையாகியது ஏன்? என்ன தைரியம் அதன். கொம்புகளுக்கும் இருதயத்திற்கும் பலமூட்டியிருக்கிறது? இப்படி ஒரு சந்தேகம் கோபாலரைப் பொருத்தவரை யாருக்கும் எழும்பத்தான்செய்யும். ஆந்திர அரசியலைப் பொருத்த மட்டில், கோபால் ரெட்டியின் கோர நர்த்தனத்திற்குக் காரணம், ஆந்திர கம்யூனிஸ்டுத் தோழர்களின் அலட்சியமும், அதன் விளைவால் கோபாலருக்கு வளர்ந்திருக்கிற அசட்டுத் தைரியமும்தான் என்பதை நம்மால் நிலைநாட்டிக் காட்டமுடியும்! சென்ற தேர்தலிலே ஆந்திராவில் கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு ஏற்பட்ட படுதோல்வி கோபாலருக்கு இரட்டை வெற்றி! கம்யூனிஸ்டுத் தோழர்கள் அங்கே எதையும் பேசுவதற்கான தைரியத்தைஇழந்துவிட்டார்கள்; மக்கள் அந்தப் 'புரட்சி வாதி'களை நம்பி ஏமாந்துவிட்டார்கள் என்பது அசைக்கமுடியாத உண்மை. "நம்மை எதிர்த்து நின்ற ஒரு கட்சி நம்மிடம் தோற்றேன், தோற்றேன்" என்று ஓடிவிட்ட பிறகு நாம் எதைச் செய்தாலும் எதிர்த்துக் கேட்க நாதியில்லை என்ற எண்ணம் வளர்வது: அதிலும் அரசியல் வானில் ஒளி பெற்றிருந்த ஒருவர் உள்ளத்தில் எழுவது விந்தைக்குரியதல்லவே! மூத்த மகனின் கலியாணத்தின்போது தட்டான் ஒருவரால் மோசம் செய்யப்பட்ட கலியாண வீட்டுக்காரர், இரண்டாவது மகன் கலியாணத்திற்கான நகைகளை வேறொரு தட்டானிடம் கொடுக்கிறார். அந்தத் தட்டானின் மோசக்காரியத்தை, முதல் தட்டான் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் கல்யாண வீட்டுக்காரரின் காதுகளில் ஏறுதுதான், இரண்டாவது தட்டான் பெரும் மோசக்காரனுக இருந்தாலும் கல்யாணவீட்டார், முதல் தட்டானின்பாலுள்ள அவநம்பிக்கையால் அவனுடைய கூற்றை ஒத்துக் கொள்ளவேமாட்டார்கள். ஆந்திர மக்கள், அந்தக் கல்யாணவீட்டார் நிலையிலேதான் இருக்கிறார்கள். காங்கிரஸ் தட்டானின் மோசம் அவர்களுக்கு புலப்பட நாளாகும். இந்த "கைங்கர்யத்"தைச் செய்துவைத்தவர்கள் மூத்தமகன் திருமணத்திற்கு நகை செய்த கம்யூனிஸ்டுக்காரர்கள்தான். எந்தப் பொதுப் பிரச்சினைகளிலும், அந்தந்தமாநில மக்களின் வனவளத்திற்கேற்றவாறு தங்களின் நடைமுறைச் செயல்களை மாற்றிகொள்ளாத கம்யூனிஸ்டுகள் எந்தக் கலியாண வீட்டிலும் பெயர் வாங்கவே முடியாது.

ஆந்திர காங்கிரஸ் தட்டானும் முதல் தட்டானை முன்வைத்துக் கொண்டு படுமோசம் செய்தால் கலியாணக்காரருக்கு மூன்றுவது தட்டான் கிடைக்காமல் போகமாட்டான்.

★


விற்பனையாகிறது !

முடிசாய்ந்தது ரூ. 1 4 0
(சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத்)

முசோலினி ரூ. 0 10 0
(வி. சிவப்பிரகாசம், பி.ஏ.)

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி அச்சில்
(கண்ணதாசன்)

விபரங்களுக்கு :
நீலா நிலயம்
2-127, மவுண்ட் ரோட்,
சென்னை-6.

# சிறை மீண்ட காதலர்க்கு!

**கண்ணதாசன்**

இதய வேந்தே! இன்றையப் பொழுது விடிந்தபோது, வசந்த காலத்தின் நளின சுகங்கள் நம் இல்லத்து வாயிற் கதவுகளை தட்டின! எண்ணச் சுவையிலே கண் மூட மறந்து, இரவெல்லாம் விழித்திருந்த நான், இயற்கையின் தாள மாட்டாத அழுக்கத்திஞல் அப்போது தான் சற்றுத்துயில் கொண்டிருந்தேன். "குவளை விழிகளுக்கு இமை மூடி போட்டுக் கொண்டிருக்கும் கோமளமே! பொழுதுவிடிந்து விட்டது! புள்ளினங்களின் உல்லாசப் படபடப்பை நீ கேட்கவில்லையா? வாசற் பெருக்கி, சாணம் தெளிக்கும் வண்ண மங்கையரின் கைவளையோசை உன் காதுகளிலே விழவில்லையா?

"கறப்போரைக் கூவியழைக்கும் பசுக்களின், "அம்மா" என்னும் குரல், இம்மாநிலம் முழுதும் கேட்கிறதே, உனக்குக் கேட்கவில்லையா? கடற்பாம்பின் கரங்கள் போல் கதிர்களை நீட்டிக் கொண்டு, செங்கதிரோன், கீழை வானத்திலே முதலடி எடுத்து வைக்கிருனே, அதைக் காண உனக்கு விருப்பமில்லையா? அடி பெண்ணே! கையணையைத் தலையணையாய்க் கொண்டு கனவுலக விளிம்பிலே படுக்கை பரப்பிக் கொண்டு, கட்டழகு மலர்களிலே ஒரு கூடை கொட்டி வைத்தாற் போல்--பட்டு மேனியின் பளபளப்பிலே பாலொளி சிந்தி--தன்னந் தனிமையில் முல்லை முறுவலை இல்லை எனது வழங்கிக் கொண்டு கருமியின் செல்வம் போல் கிடக்கும் காரிகையே! புவனத்து உயிர் வர்க்கங்கள் உணர்ச்சி நடை போடுகின்றன; நீ மட்டும் என் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிருய்? உனக்காக விடிந்த பொழுதிலே ஊர் எல்லாம் சிரித்துக் கொண்டிருக்கிறது. அடி ஒய்யாரத் தோகையே! பையப் பையவாவது கண்களைத் திற! சங்குக் கழுத்தும், தடம் பணைத் தோளும், திங்கள் முகமும், செங்கனி வாயும், பங்கயக் கையும், கைப்பிடி இடையும், மேகத்தைச் செதுக்கி வித்தகன் நீட்டிய சன்னக் கம்பியின் தொகுப்பெனச் சரிந்து கிடக்கும் கூந்தலும், எனக்கே சொந்தம்--எனக்கே சொந்தம் என்று அள்ளி அணைத்து, பிள்ளைக் குலத்தைப் பெற்ருேர் அணைத்தல் போல் வெள்ளப் பெருக்கென மெய் உயிர் கலக்கும் கள்ளமறு நின் கணவனின் வருகை இன்றுதான் பெண்ணே! இன்றுதான்! விழி! எழு! மேனி கழுவு! புத்தாடை புனை! கத்திரிப் பூ வர்ணவிழிக்குக் கரியமையால் எல்லைக்கோடு போடு! வரப்போகிருனடி கணவன்! பலப்பல திங்கள் சிறையிலேயிருந்து, பாதி உடலையும் பரிசாகத் தந்து, உரம்படு நெஞ்சும் திறம்படு நினைவும் பூண்டு, இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுவானடி! இத்தனை காலமும் நினைவிலிருந்த உன் முகத்தை, சத்தும் சாரமும் சேர்த்துத் திரட்டிய தங்க வடிவத்தை, கண்ணுற் கண்டு கருத்தால் உண்டு களிப்புறப் போகிருனடி அவன்! இன்னும் கொஞ்ச நேரத்தில் நீ பாரேன்! வேக வேகமாக வருவான்; தன் இடக்கரத்தை உன் இடையிலே சேர்ப்பான்--பெண்ணே! அது படக்கென முறிந்து விடாமல் பார்த்துக்கொள்! தன் முகம் காணக் கண்ணுடி தேடுவான். தங்கமே! உன் தந்தக் கழுத்தைத் தயாராக வைத்துக்கொள். உச்சிக்கு முத்தமிட்டு, நெற்றிக்கும் ஒன்று தந்து, கண்களிரண்டுக்கும் அந்தக் கதை கூறி, கன்னத்தில் அச்சிட்டு, பின் வண்ண உதட்டுக்கு வருவான்; அன்னமே! எண்ணும் பொழுதே எப்படியோ இருக்கிறதே! இன்னும் சிறிது நேரத்தில் அதை நீ பெறப் போகிருயே! ஏனடி இன்னும் தூங்குகிருய்? பலகாலம் கழித்துப் பார்க்க வருகிருன் கணவன் என்ருல் பகற் பொழுதும் நிலாப் பொழுதாகாதா? பனி மொழியே! இன்ப உலகத்தின் விசித்திரங்களுக்கு உன்னைத் தயாராக்கிக்கொள்" என்று வசந்தத்தின் நளின சுகம் என்னை தட்டி எழுப்பிற்று. கண்ணுளா! எனக்கிருக்காதா அந்த எண்ணம்! எழுந்து விட்டேன் உடனே! எழிலாக்கிக் கொண்டேன் மேனியை! இயற்கைக்கும் செயற்கைக்கும் மணம் முடித்து வைத்தேன்! "இரு விழியிலே நவரச நாடகம்" என்பீர்களே, அதை எப்படி ஆடுவதென்று ஒத்திகையும் பார்த்துக் கொண்டேன்! வலக்கையை இடக் கையால் தொட்டு, வந்தால் இப்படித்தான் தொடுவார், என்று நானே எனக்குள் நயங்கண்டு கொண்டேன்! தங்கள் புகைப் படத்தை எடுத்து முன்ஞல் வைத்துக் கொண்டு, உங்கள் பொன் உதடுகளை எண்ணத்தில் நிறுத்தி, என்னிரு உதடுகளால் மட்டும் இச் சென்று ஒலிகளை எழுப்பினேன்--சட்டென்று ஒரு எண்ணம்; அக்கம் பக்கம் பார்த்தேன்; அங்கே யாரும் இல்லை! ஆஞலும் வெட்கம் தாங்க முடியவில்லை! குப்புறக் கவிழ்ந்தேன்; என்னை நானே கோபித்துக் கொண்டேன். தலையணையில் முகம் கவிழ்த்தேன். என்ன சொல்வேன்! என் கைகள் என் சம்மதமின்றியே தன்னிச்சையாகத் தலையணையோடு உறவாடின! பழைய பாடல் ஒன்று-பாடிப் பாடி தரம் குறைந்து போன காதல் பாடல்--என் இதழ்கள் மனதைக் கேட்காமலேயே பாட ஆரம்பித்தன. மின்சார அதிர்ச்சி மேனியைச் சிலிர்க்க வைத்தது. கண்மூடி புவிமறந்தேன். கற்பனை எலலை வாரி எடுத்துக் கொண்டது.........

கடிகாரத்தின் விஞடி முள் புது மாப்பிள்ளை போல் முறுக்கிக் கொண்டு ஓடிற்று.

பெரிய முள்ளும் பழைய மாப்பிள்ளை போல் பக்குவமாக நடந்து கொண்டிருந்தது.

சின்ன முள்ளோ அனுபவித்துக் களைத்து அதை நரை திரை என்னும் அச்சேற்றி வைத்துக் கொண்டிருக்கும் வயோதிகர்கள் போல் தடியூன்றி நடந்து கொண்டிருந்தது.

ஆதவன் தவழ்ந்தவாறு உச்சிக்கு வந்து சரிந்து கீழே விழுந்து விட்டான். மேலைக் கடலும் மலையும் அவனைக் கூட்டாகக் கொள்ளையடித்துக் கொண்டன.

ஐயோ! என்ன சொல்வேன். பகற்பொழுது கடந்தும் நீங்கள் வரவில்லையே. "சிறையிருக்கும் காலத்தில் மறந்துவிடுமாறு கேட்டதற்காக ஆயுள் முழுவதும் மறந்துவிடத் தீர்மானித்து விட்டீர்களா?" இதயம் சூடேறிற்று! கண்கள் கடலாயின! கற்பனை தூள் தூளாயிற்று சோர்ந்து போனேன். அடுத்த வீட்டு அழகப்பன் வந்தான். "தம்பி! அண்ணன் எங்கேயடா?" என்று கேட்டேன். "இன்னும் இருபது நாளைக்கு வரமாட்டார்" என்ருன். "ஏனடா" என்று பதறினேன். ஊருக்கு ஊர் தோழர்கள் உங்களை அள்ளிக்கொண்டு போகிருர்களாம் வழி நெடுகிலும் மகிழ்ச்சித் தேனை வாரி வாரி வழங்குகிருர்களாம்! அது முடிந்ததும் தான் மனைவியின் நினைவே உங்களுக்கு வருமாம்--இப்படி அவன் சொன்ஞன்! எனக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. உங்கள் தோழர்கள் அனைவரையும் மொத்தக் கூட்டாகக் கொன்று விடுவோமா என்று தோன்றிற்று. சக்தியிருந்தால் அப்படிக் கூடச் செய்திருப்பேன். ஆம்; நிச்சயமாகச் செய்திருப்பேன். "என்" என்று கேட்கிறீர்களா? தங்கள் இதயத்தில் எனக்கிருந்த முதலிடத்தை அவர்கள் பிடித்துக்கொண்டு என்னை இரண்டாவது ஸ்தானத்துக்குத் தள்ளி விட்டார்களே, அதஞல் தான்.

தங்கள்
காதலி.

## அடுத்த இதழில்!

★ வளமிகுந்த காடு வாழ்விழந்தது எப்படி?
★ சீரும் சிறப்பும் சிதறியோடியது எவ்வாறு?
★ திராவிடத்தின் பொருள் வளம் இனி எப்படி அமையப்போகிறது?

பொருளாதாரத் தொடர் கட்டுரை!

சொல்லின் செல்வர்

ஈ. வி. கே. சம்பத் எழுதும்

## "வாழ்வது எப்படியோ?"

அடுத்த இதழில் தொடங்குகிறது.

இலக்கிய வளர்ச்சிக்கு
தென்றல்
வழங்கும்
ரூ 2000
இலக்கியப் போட்டி
முடிவு தேதி 30-6-55

# காளமேகர் கற்பனை



ஏடேந்தி எழுத்தாணி பிடித்த பண்டைப் புலவர்களில் பெரும்பாலோர் எந்திழையரின் அங்க சேஷ்டைகளையும், ஆடவரின் சிந்தை கொன்றிடும் அன்னவரின் தளுக்கு மினுக்குகளையும் தான் ஏட்டிலே எழுதி நாட்டிலே பரப்பியிருக்கிறார்கள். கோலமுடி மன்னர்களெல்லாம் ஞாலத்து அழகிகளின், ஆடைப்பெட்டிக்குள் இருக்கும் 'இன்பப்பொருளை'ப் பற்றிய வர்ணனையைத்தான் சுவைத்தார்கள் போலும்; ஆம் உண்மைதான்! "ஆறுகால பூஜை தவருது நடந்தனவா, அமைச்சரே!" என்று கேட்ட 'பிரகஸ்பதி'கள் தானே அந்த மன்னர்கள்; அவர்கள் போதை நீர்சுரக்கும் போகபோக்கிய பொருள்களைத் தானே சுவைத்திருப்பார்கள். இல்லாவிட்டால் அந்தக் காலப்புலவர்கள் ஏன் பெண்களைப் பற்றியே பாடல்கள் எழுதப்போகிறார்கள். கம்பனை எடுத்துக்கொண்டால், நகக்கண்ணிலிருந்து நங்கை தன் கூந்தல் வகுடு வரை நிர்வாணமாக நிறுத்திக் காட்டுகிறான்; உடற்கூறு தெரிந்தவரைப்போல உடலில் ஓடும் உதிர ஓட்டத்தையும் சொல்லுகிறான் இன்னும் சொன்னால் கடவுள் வீட்டு பெண்களது உணர்ச்சிப் பெட்டகங்களைக்கூட எடைபோட்டுஇன்னின்ன உருப்புக்கள் இத்தனை இத்தனை 'ராத்தல்' என்றுகூடச் சொல்லியிருக்கிறார் அந்தக் கவிஞர். இன்னும் சில புலவர்கள் இருந்திருக்கிறார்கள். எந்த 'இயந்திரத்'(பெண்) திற்கு எங்கெங்கே 'விசை' இருக்கிறது என்றும் சொல்லிப்போயிருக்கிறார்கள் 'ஆட்டோமபாயில்' எஞ்ஜினியரிங் பரீட்சையில் டிகிரி வாங்கியவர்களைப்போல! புருவத்தின் வளைவை அளவெடுத்து அதற்கு புது அர்த்தம் சொன்னான் ஒரு புலவன். விழியோட்டத்தைக் கணக்கெடுத்து அவளின் 'விரகதாபம்' இத்தனை அவுன்ஸ்என்றான் மற்றொரு புலவன். இந்த வகையில் காளமேகத்தின் கற்பனையே அலாதிதான். எந்தப் பெண்மீதிலாவது ஆத்திரமாகச் சீறி விழுவார்; அதே நேரத்தில் எந்தப் பெண்ணுக்காவது பரிதாபப்படாமல் இருக்கமாட்டார். அந்த ஊர்தாசி அப்படிச் செய்தாள்; இந்த ஊர் தாசி இப்படிச் செய்தாள் என்றெல்லாம் திட்டிக் கொட்டுவார். "விட்டேனா உன்னை" என்று வீரம் பேசுவாரா எழுத்தில்! அடேயப்பா, காளமேகத்தின் கண்கள் விஷக்கண்கள் தான். கோபமாகச் சொன்னாலும் அவருடைய உதாரணங்களோ பிரமாதமாகத் தானிருக்கும். கள் இறக்குவோன் மனைமரத்தைக் கட்டித் தழுவுவதைப் போன்றது பெண்களைக் கட்டித் தழுவது என்றார் ஒருமுறை. பெண்ணுக்கும் பனைக்கும் ஒப்பிட்டுச் சொன்னார். இப்போது ஒரு கீரைக்காரிக்காக அவளுடைய அங்கச் செதுக்கலுக்காக மிகவும் வருத்தப்பட்டிருக்கிறார். "ஐயோ அவளுடைய இடை ஒடிந்து விழப்போகிறதே. அதை அவளிடம் போய் சொல்வாரில்லையே" என்று வருந்துகிறார் புலவர். ஏன்" தலையிலே உள்ள கீரைக்கட்டின் பாரம் அவளுடைய இடையை ஒடித்துவிடும் என்று புலவர் கவலைப்படுகிறார்? இல்லை! அப்படியானால் தான் நேராக ஓடிப்போய் கீரைக் கட்டையே தரையில் தள்ளிவிடுவாரே! வெளிப்படையாகச் சொல்ல முடியாத பாரம் அவளுடைய இடையை ஒடிக்கப்போகிறதேஎன்று தான் புலவர் துடிக்கிறார். எள்ளளவும் கல்மிசமில்லாத ஏழை யுவதியின் சிலை வடிவம் கவிஞனின் கற்பனைக்கு கூரேற்றிவிட்டது.

"எங்களுடைய தெரிவில் வள்ளைக்கொடிக்கீரை விற்கும் இளம் பெண்ணின் பெரிய ஸதனக்கொத்துகள் அவளுடைய இடையை மேலிருந்து அழுத்தி ஒடித்துவிடப் போகிறது; இதை அந்தச் சதைக் குன்றுகளுக்கு எதிரே போய் சொல்லிஇளங்கொடியின்இடையை காப்பாரில்லையா என்கிறார் புலவர் காளமேகர். இதை காளமேகர் வாயாலேயே கேட்கிறீர்களா; கேளுங்கள்!

**வெள்ளை யானேறும்**
**விமல ரடிபணியும்**
**பிள்ளையான் வாழும்**
**பெருந்தெருவில்-வள்ளை**
**இலைக்கறிவிற் பாண்மருங்கு,**
**விற்றுவிடுமென்று**
**மூலைக்கறி விப்பாரில்லையே மூன்-**

இவையே காளமேகர் வாய்மொழி. இன்னொரு முறை திருப்பிப் பிடித்துப் பாருங்கள்.

◉

# ஐயர் விடுதலை !

நீயவனே என்னைத் தீண்டாதே என்று கூறினர் ஒரு ஐயர்-பூநூல்-குடுமியுடன்! மாடு தின்னும் புலையா என்று கூறும் காலமல்ல இது; வேதியரே வருவீர் என்றது சட்டம்!

இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு புராட்டப்பட்டது.

இந்த நாட்டு குடிமகனை இழிவுசெய்த அந்த வேதியர் சிறைக் கம்பிகளுக்குள்ளே இருநதார்.

இப்படி ஒரு படம் கலர்ப்படமாக வெளியாகி இருந்தது. சென்னை சர்க்கார் அச்சடித்திருந்தனர்

நாட்டிலே நடைபெறும கொடுமையினை விளக்கவும் கொடுமையைப் போக்க, காங்கிரஸ் சர்க்கார் செய்துள்ள பாதுகாப்பை எடுத்துக் காட்டவும, அந்தப்படம உதவுமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

நாடெங்கும் அந்தப் படங்கள் அனுப்பப்பட்டன. பாராளும் சர்க்கார் தீண்டாமையைப் போக்க எடுத்துள்ள நடவடிக்கையைக் கண்டு பலர் மகிழ்ந்தனர்.

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்தோரின் உள்ளத்திலே ஒரு எழுச்சி, விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதே நேரத்தில் அந்தப் படம் சிலருக்குத் தேள் கொட்டியதுபோன்ற துடிதுடிப்பை உண்டுப்பண்ணியது. கூடாது. கொடிய செயல்-ஒரு இனத்தையே பாதிக்கும் போக்கு என்று புலம்பினார்கள் ஒரு கூட்டத்தினர்.

நாட்டுக்குடையவன் சேரியில் வாழவேண்டுமென்று தாசவேலை செய்த கூட்டம் அந்தப்படத்தைக் கண்டு சீறியது.

தீண்டாமை ஒழிப்பை விளக்க இதுவா முறை? அரிசன் முன்னேற்றத்திற்கு உழைத்தவர்கள் பலர் நிறைந்த இனத்தவரை இப்படி இழிவு செய்யலாமா என்று கேட்டனர்.

பார்ப்பனர் மகா சபையினர் பதறினார்கள். வேதியர் குலத்தின் பத்திரிகைகள் பக்கம்பக்கமாக எழுதின.

படத்தை உடனே திரும்பப்பெறவேண்டும். படம் எழுதி பாதகம் விளைவித்தோரைத் தண்டிக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் கோபத்துடன கூறினார்கள். சர்க்கார் அலுவலகத்தின் முன்பு மறியல் செயவோம்-துக்கநாள் கொண்டாடுவோம எனறனர்.

சென்னை சர்க்கார்-அதாவது கனம் காமராசரின் தலைமையிலே உள்ள சார்க்கார் 'தீண்டாதே என்னை' என்று கூறும் கொடியவன் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் காட்சியை பொதுமக்களுக்கு காட்டுவது இனிமேல் நிறுத்தப்படும் என்று கூறிவிட்டார்களாம்.

ஆரிய அடிமைகள் நிறைந்த சர்க்கார் தான் சென்னையில் இருக்கிறது என்றால் பலருக்கு கோபம் கொப்பளிக்கிறது. படம் இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி தீர்மானிக்க சர்க்கார் அதிகாரிகள் கூடிப்பேசிய போது அமைச்சர் சுப்பிரமணியம் இருந்தார் என்று பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஆரியம் உயரவும், அது துன்புறும்போது துடித்து அழவும அமைச்சர் சுப்பிரமணியம் எவ்வளவுதூரம்பயன்படுகிறார் என்பதற்கு இது ஒரு நிகழ்ச்சியா?

படம் கூடாது: மன்னிப்புக்கேள்! இல்லையேல் ஒழித்துவிடுவோம்-என்றது ஆரியம்-இன்று சென்னை சர்க்கார் படத்தை வாபஸ் பெற்றுக்கொண்டதாம்.

'நேக்குத் தெரியுமே! காமராசர் நம்மளவளுக்கு எதிரா இருப்பாரோ" என்று அக்கிரகாரம் பேசுகிறது.

காமராசர்-பார்ப்பனர் குரலுக்கு பணிந்தார்-படத்திலே இருந்த ஐயர் விடுதலை பெற்றார். ஆனால் கனம் காமராசர் இந்த நிகழ்ச்சியிலும் வழக்கம்போல் மௌனம் சாதித்தார்.

ஆனால் டால்மியாபுரம் கல்லக்குடியாகவேண்டுமென்று கோரினோம்! உயிர் தந்தோம்-சிறை புகுந்தோம் இன்று காமராசர்கையில் அதிகாரமிருக்கிறது-திராவிடர் கோரிக்கை நிறைவேறவில்லை. ஆனால் அக்கிரகாரம் இன்று இனிய முகத்துடன் இருக்கிறது. காமராசர் பதவியில் இருந்து நாட்டையாள்கிறார்.

இது என்ன நிலையோ!

அவர் ஆட்சியில் ஆரியம்-காரியமாற்றுகிறது-களிப்புக் கடலில் நீந்துகிறது!

நாம்-வாடுகிறோம்.

—வி. சிவப்பிரகாசம், பி.ஏ.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
198328
சென்னை-600 008




அன்னை அறைக்குள் தூங்கிக் கொண்டிருக்க வில்லை. ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். பேச்சு மூச்சின்றி அசைவற்றிருந்தாள். கண்கள் மூடியிருந்தன. உடல் விரைத்துப் போயிருந்தது. நந்தினி உள்ளே சென்றதும் அன்னையின் நிலையைக் கண்டாள். "அம்மா என்று கத்திவிட்டாள். பின்னாலேயே வந்த மங்கை அன்னையைத் தொட்டுப் பார்த்தாள். உடலில் சூடு இல்லை. உடல் விரைத்து பனிபோல் குளிர்ந்திருந்தது. அவளும் "அம்மா" என்று கத்திவிட்டாள். விபரம் புரியாமல் வெளியில் நின்ற மற்றவர்களும் அங்கே வந்தார்கள். அன்னை இறந்து போனதை எல்லோரும் அறிந்தார்கள். எல்லோருடைய கண்களும் கண்ணீர் வடித்தன.

பெண்கள் தேம்பி அழுதனர். மற்றவர்கள் மௌனமாக நின்றனர். திகைப்பினால் யாரும் எதுவும் பேசவில்லை. தளநாயகன் பெண்களை ஒதுக்கிக்கொண்டு அறைக்குள் நுழைந்தான். அன்னைக்கு முன்னால் மரியாதையுடன் வணக்கம் செய்தான். அன்னை எழுதி வைத்த ஓலைகளைக் கண்டான். அவற்றை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான்.

ஒன்று, மன்னன் இராசேந்திரனுக்கு எழுதப்பட்டது. அதில், நாட்டிற்குப் பணிபுரியவே மானமிழந்தும் வாழத் துணிந்ததாகவும், கடமை நிறைவேறிவிட்டதால் உயிரை மாய்த்துக் கொள்வதாகவும், தான் இறந்தபிறகு தனக்கு ஆடம்பரமாக எதுவும் செய்ய வேண்டாமென்றும், நாட்டின் விடுதலைக்கு உடல், பொருள், ஆவி அனைத்தும் தியாகம் செய்த, சோழநாட்டுப் பெண்குலத் திலகங்களுடன் தன்னையும் ஒருத்தியாகக் கருதினால் அதுவே போதுமென்றும், சோழநாட்டு மண்மீது தான் சாகவேண்டுமென்பதே தனது கடைசி ஆசையென்றும் அதை நிறைவேற்றிக்கொண்டதாகவும் எழுதியிருந்தாள் அன்னை.

மற்றொன்று தளநாயகனுக்கு எழுதப்பட்டது; அதில், கடமையாற்றும் கர்மவீரனாகிய தளநாயகனை மருமகனாக ஏற்றுக்கொள்வதாகவும், நந்தினியை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்று, இருவரும் சோழ நாட்டிற்கும், அரசகுடும்பத்திற்கும் என்றென்றும் பணியாற்றும்படியும் குறிப்பிட்டிருந்தாள்.

மூன்றாவது ஓலை நந்தினிக்கு எழுதப்பட்டது. அதில், தனது ஒரே மகளான செல்வி நந்தினியை விட்டுப் பிரிவதாகவும், நந்தினி தன் கருத்துக்கிசைந்த காதலனின் கரம்பிடித்து, நன்கு வாழவேண்டுமென்றும், கணவனையும், நாட்டையும் இரு கண்களாகப் பாவிக்கும் படியும், தாயில்லாமல் வாழ்ந்து பழகிய நந்தினி, தாயின் பிரிவை நினைத்து வருந்தாமல், வழக்கம் போல் கடமையில் கருத்தைச் செலுத்தும்படியும் எழுதியிருந்தாள்.

நான்காவது ஓலை மங்கை, மரகதம் போன்ற பெண்களுக்கும், தனது படைவீரர்களுக்கும் எழுதப்பட்டது. அதில், மங்கை, மரகதம், தங்கம் முதலிய பெண்கள் அன்னையின் கட்டளை ஒன்றையே சிரமேற்கொண்டு, தன்னலங் கருதாது கடமையைச் செய்து வந்ததைப் பாராட்டுவதாகவும், இனியும் பெண்கள் குலத்தின் நன்மைக்காக தொடர்ந்து பாடுபடும்படியும் எழுதப்பட்டிருந்தது. அன்னையின் படைவீரர்கள் சோழ மன்னனின் கட்டளைக்குப் பணிந்து நடக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தாள்.

எல்லா ஓலைகளையும் அங்கு கூடியிருந்தோருக்குப் புரியும்படி வாசித்துக் காட்டினான் தளநாயகன். மன்னனுக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது. மன்னன் திடுக்கிட்டான். ஓடோடி வந்தான். தன்னையறியாமல் அவனும் கண்ணீர் விட்டான். இதற்குள் அன்னை இறந்த செய்தி காட்டுத் தீபோல் நகரெங்கும் பரவியது. அன்னையின் ஊர்வலத்தைப் பார்க்க வீதிகளில் திரண்டு நின்ற மக்கள் சோகத்தால் புலம்பினர்.

சிறிது நேரத்தில் அன்னையின் உடல் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. அன்னையை உயிரோடு பார்க்காத மக்கள், அன்னையின் உடலை மட்டுமே பார்த்தனர். கடைசியாக படைகள் அஞ்சலி செய்ய, மரியாதையுடன் அன்னையின உடல் அடக்கம் செய்யப்பட்டது.

## 12

## எல்லாம் போல நல்ல முடிவே !

வாழ்க தாழ் வுயர் வில் லாத்தனித் தமிழர்
வழங்கு செந் தமிழ் மொழி வாழ்க!
வாழ்க செந் தமிழைத் தாய் மொழி யாக
வழங்குசெந் தமிழர்கள் வாழ்!
வாழ்கபல் வளமும் பொருந்தியே தமிழர்
வாழ்கதிரா விடமது வாழ்க!
வாழ்கவெந் நாளு மிக்கதை தமிழர்
மனத்தளி பொலிந்துவா ழியவே!

அந்திநேரம். இராசராசனும் இன்பவல்லியும் இடைதுறை அரண்மனையின் உப்பரிக்கையில் உல்லாசமாகப் பொழுது போககிக் கொண்டிருந்தனர். ஒரு வீரன கடிதமொன்றைக் கொண்டுவந்து கொடுத்தான் இளவரசனிடம். இராசராசன் அதை வாங்கிப் படித்தான். அவன் முகத்திலே வியப்பும் திகைப்பும் மாறி மாறித் தோன்றின. அவன் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த இன்பவல்லி, காரணம் புரியாது தவித்தாள். "யாருடைய கடிதம்? என்ன செய்தி?" என்று அடிக்கடி கேட்டாள்.

"அன்னை இறந்து விட்டார்களாம்!" என்றான் இளவரசன் துயரம் நெஞ்சை அடைக்க! "ஆ! ஏன்? என்ன காரணம்?" என்று திகைப்புடன் கேட்டாள் இன்பவல்லி! "கடமை முடிந்துவிட்டது என்று சொல்லி, தற்கொலை செய்து கொண்டார்களாம்" என்றான் இளவரசன்.

"அப்படியானால் நந்தினி அக்காளின் கலியாணம்?"

"என் தந்தை அப்பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்று அன்னை விருப்பம் தெரிவித்தாளாம்!"

"எப்போது?"

"நாம் எப்போது அங்கே போகிறோமோ, அப்போது!"

"நமக்குத்தான் இன்னும் உத்தரவு வரவில்லையே!

"வந்துவிட்டதே!"

"எங்கே!"

"இதே கடிதம்தான்!"

மகிழ்ச்சியினால் இளவரசனைக் கட்டியணைத்துக்கொண்டாள் இன்பவல்லி!

"கடிதத்தில் இன்னும், என்ன எழுதியிருக்கிறார்கள்?"

"உன்னை அழைத்துக்கொண்டு என்னை வரச்சொல்லியிருக்கிறார்கள். நம்மிருவருக்கும் மணம் முடிக்கும்படி, சாவதற்கு முன்னால் என் தந்தையிடம் அன்னை நேரிலேயே கெஞ்சிக் கேட்டுக்கொண்டாளாம். அன்னை இறந்ததும் அவள் விருப்பத்தை உடனடியாக நிறைவேறறவே நம்மை அழைத்திருக்கிறார் மன்னர்!"

"அப்படியானால் வாருங்கள் இப்போதே புறப்பட ஏற்பாடு செய்வோம்!" என்றாள் இன்பவல்லி. இளவரசனும் இன்பவல்லியுடன் புறப்பட்டுச் செல்ல ஆயத்தமானான். தங்களுடைய வருகையை முன்னாலேயே அறிவிக்கும்படி கடிதம் கொண்டுவந்த தூதனை அனுப்பி வைத்தார்கள். அந்தத் தூதனும் உடனே புறப்பட்டுச் சென்றான்.

★

அன்னை இறந்து ஒரு மாதமாகிவிட்டது. மீண்டும் தஞ்சை நகரம் புத்துயிர் பெற்று விளங்கியது. இளவரசன் இராசராசனுக்கும் இன்பவல்லிக்கும் திருமணம் நடைபெறப்

(8-ம் பக்கம் பார்க்க)




பி. சி கணேசன், B Sc.,B.T.

வீடு பூட்டிக்கிடந்தது; தபால்காரன் ஜன்னல் பக்கமும் போய்ப் பார்த்தான். ஜன்னல் கதவுகளும் அடைபட்டுக் கிடந்தன. அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்தான். வீட்டிலுள்ளவர்கள் எங்கே போனார்கள் என்பதைப் பற்றி சரியான தகவல் அவர்களும் கொடுக்க முடியவில்லை. இரண்டொரு விநாடி யோசனை செய்தான். பிறகு கதவிடுக்கின் வழியாகக் கடிதத்தை நுழைத்தான். அவன் கடமை முடிந்தது. கடிதம் மட்டும் கவனிப்பாரற்றுக் கதவிடுக்கிலே சிக்கித் தவித்துக்கொண்டிருந்தது. அந்தக் கடிதம் எவ்வளவு உணர்ச்சிகளைத் தன்னுள்ளே அடக்கிவைந்துக்கொண்டிருந்தது தெரியுமா? கடிதத்தை அப்படியே கீழே தருகிறேன் படித்துப் பாருங்கள்.

அத்தான் அவர்களுக்கு,

குமுதம் தாழ்மையுடன் எழுதிக் கொள்ளுவது. அன்னப்பறவை இறக்குமுன் இனிய கீதம் ஒன்றைப் பாடித்தான் இறக்குமாமே - அது போன்ற இறுதிக் கீதம்தான் நான் எழுதும் இந்தக் கடிதமும்.

இந்தக் கடிதம் உங்கள் கையில் கிடைக்கும்பொழுது, என்னுடைய உடல் நெருப்பிலே வெந்து நீருகியிருக்கும். இந்தச் செய்தியைக் கேட்டவுடன் நீங்கள் அதிர்ச்சியடைந்து விடுவீர்கள் என்று எண்ணியோ, அன்றி உங்கள் மனைவியிடம் உங்களுக்கு இரக்கம் பிறந்து விடும் என்று நினைத்தோ நான் இக்கடிதம் எழுதவில்லை. என்னைச் சுட்டெரித்த சாம்பல்கூட அம்மாதிரி தவருக எண்ணிவிடாது!

உலகத்தில் மனிதர்கள், ஒன்று வாழவேண்டும்; அல்லது சாக வேண்டும். வாழமுடியாத நான் சாகக்கூடாது என்று சொல்லுகிறவர்கள் வஞ்சகர்கள். வாழ்வதற்கு எனக்கு வகை செய்யத் தெரியாதவர்கள், நான் சாவதை என் தடுக்கவேண்டும்?

மனைவியின் துன்பக்கோட்டையிலே இன்பவாழ்க்கை வாழக் கணவனுக்கு எல்லா வசதிகளும் உண்டு - அப்படிப்பட்ட வாழ்க்கைதான் நீங்கள் வாழ்வது. ஆனால், கணவனை நீக்கிக் கண்ணியமான வாழ்க்கை வாழப் பெண்ணுக்கு உரிமையேது?

ஒவ்வொரு பெண்ணும் வாழ்க்கையில் ஒரு முறைதான் அழிக்க முடியாத தவறைச் செய்யமுடியும். அதை நான் செய்துவிட்டேன். பிறகு மீட்சிக்கு வழி?

மன்றல் மகிழ்ந்து வாழ்த்தொலி முழங்க அக்காலை நீங்கள் மாலையிட்டபொழுதே என்னுடைய உள்ளத்தில் அழியாத ஓவியமாக உருப்பெற்றுவிட்டீர்கள். இவ்வளவு அழகிய கணவரைப் பெற்றுவிட்ட அக்காவின் சிறப்பை எண்ணிப் பாராட்டிய என் மனம் உங்களைப் போன்ற ஒருவரையே மணாளராக அடையவேண்டும் என்று ஆசை கொண்டது. பண்படாத உள்ளத்தில் அன்று ஊன்றப்பட்ட வித்து நாளடைவில் பெரிய மரமாகவே வளர்ந்துவிட்டது!

என்னுடைய திருமணத்தைப் பற்றி எண்ணியபோதெல்லாம் தங்களின் எழிலுருவம் என் இதயத்தில் நிரம்பும். பெரும்பாலான சமயங்களில் உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் கற்பனை பிறக்கிறது. என் கற்பனைக்கு நிலைக்களனாக அமைத்த தங்கள் உருவமே நாளடைவில் என் கற்பனை உருவமாகவும் அமைந்துவிட்டது. இது என்னையறியாமல் நான் செய்த முதல் தவறு.

முதல் முறையாகத் தவறு செய்யும்பொழுதுதான் குறுகுறுப்பு, அச்சம் எல்லாம். பழகப் பழகத் தவறு சாதாரணமாகிவிடுகிறது. நான் தவறுசெய்தபொழுது நினைத்திருந்தால், நீங்கள் என்னைத் திருத்தியிருக்கலாம். ஆனால் உங்கள் செயல் எரியும் நெருப்பில் எண்ணெய் விடுவதுபோலாயிற்று!

அக்காளுடன் முதல் முறையாக நீங்கள் எங்கள் ஊருக்கு வந்தபொழுது..... .....உங்களுக்குத்தான் நன்ருக ஞாபகம் இருக்குமே...... நான் பள்ளிக் கூடத்திலிருந்து அன்று தற்செயலாகச் சற்றுமுனனதாக வந்து விட்டேன். அம்மாவும்



அக்காவும்எங்கோ உறவினர் வீட்டுக்குப் போய்விட்டார்கள். பாட்டியும் சமையற்கட்டில் வேலையாக இருந்தாள். நீங்கள் மட்டும் மாடியில் தனியாக அறையில் இருப்பதாக அறிந்தேன். நீங்களும் நானும் தனிமையாக-ஒரே வீட்டில்........ ஆகா, அந்த எண்ணம் என் உள்ளத்தைப் புல்லரித்தது! நினைத்துப் பார்க்கக்கூட நேரமில்லை! என் உள்ளத்தில் வெகு நாட்களாக அழுத்தி வைக்கப்பட்டிருந்த ஆசை என்னை உந்தித் தள்ளியது; ஆனாலும் வெட்கம்! ஆசை வென்றது. கால்கள் இழுத்துவந்து உங்கள்முன் நிறுத்தின!

பாடம் கேட்க உங்களிடம் வந்தேன். பாடம் சொல்லிக் கொடுக்காமல் என்னைப் பாடச்சொன்னீர்கள். நாணம் நடுவில் குறுக்கிட்டது! நாழிகையை வீணாக்க விருப்பமில்லாமல், என் குரலைத் தாழ்த்தி மெதுவாகப் பாடினேன். பாடும்பொழுது என் குரலில் தோன்றிய நடுக்கம், என் கண்களில் வெளிப்பட்ட ஏக்கம், என்னை உங்களுக்குக் காட்டிக்கொடுத்தது சந்தர்ப்பத்தை 'அனுபவசாலியான' நீங்களும் நன்ருகப் பயன்படுத்திக்கொண்டீர்கள். என்னை அருகில் அழைத்து நீங்கள் வழங்கிய பாராட்டுரைகள் ......நீங்கள் வழங்கிய அசாதாரணமான அந்தப 'பரிசு' ......அதை மறுப்பின்றி நான் ஏற்றுக்கொண்டது-உங்களுக்குத் துணிவை உண்டாக்கியது! எனக்கு என் வாழ்க்கையே மலர்ந்துவிட்டது போன்ற உணர்ச்சி தோன்றியது. விவரம் தெரிந்த விவேகமுள்ள பெண்ணாயிருந்தால, இம்மாதிரி மனிதர்களை நம்பக்கூடாது என்று அப்பொழுதே தெரிந்துகொண்டிருப்பேன்.

என் ஆசை இழிந்த இச்சையாக வளர்ந்தபோது, அதை உங்களுடைய செய்கை வெறியாக்கியது. அந்த வெறிக்குத்தான் நான் பலியாகிவிட்டேன்!

ஆணும் பெண்ணும் கொண்டிருக்கும் ஆசை வெறியென்ற நிலையை எட்டிப்பிடிக்கும்பொழுது, சுற்றியுள்ள சூழ்நிலையைக் கூட மறந்து நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அப்படித்தான நாம் நடந்துகொண்டோம் என்ற உண்மை, ஊருக்குப் போக விருப்பமில்லாத உங்களை வலுக்கட்டாயமாக ஊருக்குக் கிளம்பும்படி அக்கா செய்தபோதுதான், எனக்குப் புலப்பட்டது. பாவம், அவள் என்னைப்பற்றி என்னென்ன நினைத்தாளோ! என் வாழ்க்கையில் நான் செய்த தவறு அவள் வாழ்க்கையையும் பாழ்படுத்தி விட்டது!

நீங்கள் ஊருக்குப்போன சில மாதங்களிலேயே அந்தத் திடுக்கிடும்படியான செய்தி வந்தது. அக்காளுக்கு ஆகாரம் சரிவர செல்லவில்லையென்றும், உடம்பு நாளுக்கு நாள் இளைத்து வருவதாகவும எழுதியிருந்தீர்கள். இது வீட்டிலுள்ள எல்லோருக்கும் அதிர்ச்சியான செய்தியாக இருந்தது. ஆனால், நான் மட்டும்......ஐயோ, என விசித்திரமான ஆசை என்னுடைய இதயத்தையேகல்லாக்கி விட்டது. நான் மட்டும் அதை மகிழ்ச்சிக்குரிய செய்தியாகவே கருதினேன். பெண் உணர்ச்சிவயப்படும்போது பேயாகவே மாறிவிடுகிருள். ஆம், நான் பேயாகத்தான் இருந்தேன்......! அக்காவின் கல்லறைமீது என்னுடைய 'இன்ப மாளிகை' கட்டப்படும் நாளை எதிர்பார்த்தேன்!

அக்காவை இங்கு வரும்படி எவ்வளவோ வற்புறுத்தி அப்பா எழுதியும், அவள் வர மறுத்துவிட்டாள். அவள் உங்களையும என்னையும் நன்ருகப் புரிந்துகொண்டு விட்டாள்!

எதிர்பாராத வேகத்துடன் 'இன்பம்' என்னை நெருங்கிற்று! உடலைப் பற்றிய வியாதியாக இருந்தால், அவள் அவ்வளவு சீக்கிரம் இறந்திருக்கமாட்டாள். உள்ளத்தை அரித்த சோகம் சீக்கிரமே அவள் உயிரைக் குடித்துவிட்டது. நான் நினைத்தது நடந்தேவிட்டது! என்னை உங்களுக்கு இரண்டாம் மனைவியாக்க வேண்டுமென்பது அம்மாவின் ஆசை. படித்த பெண்ணான நான் அதற்குச் சம்மதிப்பேனு என்று அப்பா மட்டும் தயங்கினர். வெகுநாள் யோசனைக்குப்பின் அப்பா அவர் எண்ணத்தை என்னிடம் சொன்னார். முகத்தைச் சுளிப்பேன் என்று நினைத்தார்; முறுவலால் பதிலளித்தேன்! பருத்தி புடவையாகவே காய்த்து விட்டது!

அதற்குப் பிறகு நடந்தது? அது தான் உங்களுக்குத் தெரியுமே! 'ஆசை அறுபதுநாள் - மோகம் முப்பதுநாள்' என்பார்கள். எட்டாக் கனியாக இருந்தவரை என்னைத் துதித்தீர்கள்; கையில் கிடைத்தவுடன் காலடியில் போட்டு மிதித்தீர்கள். சோலையாகச் செழிக்குமென்று நான் நம்பிய வாழ்வு பாலையாக வறண்டது! கானலை நீரென நம்பிய மான்...... ?

உங்களுக்கு வாழ்க்கைப்பட்ட சில மாதங்களிலேயே வாழ்க்கை எனக்குக் கசந்தது. என்னுடைய தவறுகளின் சுமையை நானே சுமந்தேன். எத்தனைநாள் மனம் புழுங்கிய வாழ்க்கை வாழமுடியும்? வாழ்க்கையென்ற நாடகத்தில் கணவன் என்ற பகுதியை சரியாக நடிக்கத் தவறிவிட்டீர்கள். அதற்கு உங்களை நான் நோகவில்லை. என்னை நானே நொந்துகொள்ளுகிறேன். குற்றம் செய்துவிட்டேன். தண்டனையும் நானே விதித்துக்கொண்டு விட்டேன்.

என் தொல்லை என்னோடு நிற்கவில்லை; கிளைவிட்டு வெடித்தது. நான் கர்ப்பவதியானேன். மனைவிக்குக் கடமை செலுத்தமுடியாத நீங்கள், உங்கள் மக்களுக்கு என்ன சாதித்துவிடப் போகிறீர்கள்? மணவரங்கில் பெறும் மகிழ்ச்சியைவிட, மக்கட்பேறு அடையும்போதுதான் ஒரு பெண் அதிக மகிழ்ச்சியடைகிருள். ஆனால், நானே, குழந்தைப் பேற்றை பெருங்கேடாக எண்ணும் இழிநிலைக்கு வந்துவிட்டேன்.

வயிற்றிலே சிசுவைத் தாங்கி பிறந்த வீடு புறப்பட்ட என்னிடம், நீங்கள் அன்பு வார்த்தைதான் பேசவில்லை; அதோடு இருக்கக் கூடாதா? 'காசு, பணம் என்று கேட்டுக் கடிதம் எழுதக்கூடாது' என்ற கண்டிப்பான உத்திரவு போட்டீர்கள். சேச்சே, என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது!

மனைவியாக நான் சரியான வாழ்க்கை வாழவில்லை; தாயாகவும நல்ல வாழ்க்கை வாழ முடியும் என்ற நம்பிக்கையில்லை. பின் ஒரு பெண் வாழ்வதுதான் எதற்கு? ஆகவேதான சாக முடிவு செய்து விட்டேன். என் மரணம் இரண்டு ஜீவன்களுக்கு விடுதலை அளிக்கிறது. நீங்களும உங்கள மனம்போனபடி குடும்பக் கட்டுப்பாடற்று வாழலாம்!

தெளிந்த சிந்தனைக்குப் பிறகே மேற்கூறிய முடிவுக்கு வந்தேன். உங்களிடமும் உலகத்திடமும் விடை பெற்றுக்கொள்ளும் நேரத்தில், என் அனுபவம் வீணாகிவிடாமல் இருக்க, அவற்றைத் தொகுத்துக் கடிதமாக்கினேன். துன்பத்தை அனுபவித்தறியாத உல்லாசிகளும், கண்ணெதிரே காணும் உண்மைகளை மறந்துவிட்டுக் கற்பனையை மட்டும் நம்பிக் கதை எழுதும் எழுத்தாளர்களும் என்னைக் 'கோழை' என்று அழைக்கட்டும். பசிக்கும்போது உணவருந்துவதும், தாகமாயிருக்கும்போது தண்ணீர் அருந்துவதும் கோழைத்தனமானல், வாழமுடியாதபோது கோழைத்தனம்தான்!

(10-ம் பக்கம் பார்க்க)

# சிரிப்புத்தான் வருகுதையா!

சிரிப்பு, இடைவிடாமல் வருவதில்லை. வந்தாலும் அதற்குத் தனி உணர்ச்சி இருப்பதில்லை. எப்போதாவது சில நகைச்சுவை நிகழ்ச்சிகள், திடீரென்று தோன்றி நம்மை நகைக்கவைக்கும். அப்போது மனதிலே ஒரு உற்சாகமும் உடலிலே ஒரு கிளுகிளுப்பும் ஏற்படும். எனக்கும் வெகுகாலத்துக்கு அப்புறம் இப்போதுதான் சிரிப்பு வருகிறது.

ஒருநாள் காலையில் பத்திரிகைகளைப் புரட்டினேன், ஒரு செய்தி! செய்தி என்றால் அப்படி இப்படி அல்ல! மிகவும் பயங்கரமானது! திராவிட சமுதாயத்தின் எதிர்கால வாழ்வு என்ன ஆகுமோ என்று "சிந்திக்க" வைக்கக்கூடியது! இது நாள்வரை நாம் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருந்தது! ஆமாம்!

காவிரி நதியில் கலக்கமுடியாதென்று சேறு மறுத்துவிட்டது!

கட்டழகு மயில்களோடு ஒட்ட முடியாதென்று காகம் கூறி விட்டது!

சிங்கங்களோடு உறவு இல்லை என்று சில்வண்டு செப்பிவிட்டது!

திராவிடர் கழகங்களோடு சேர முடியாது என்று சிவஞானம் கூறி விட்டார்!

என்ன செய்வோம்! ஐயகோ! கெட்டோமே!

'படித்த' தலைவரையும் 'பல லட்சம்' உறுப்பினரையும் கொண்ட தமிழரசுக்கழகம் திராவிட இயக்கத்தோடு சேரமாட்டேன் என்று கூறி விட்டதே! எங்களுக்கு அரசியல் 'தொழில்' நிபுணர்கள் கிடைக்காமல் போய்விட்டார்களே! ஓகோ உலகத்தீர்! கொஞ்சம் சிவஞானத்தைப் பார்த்து சிபாரிசு செய்யுங்களேன்! இலக்கணந் தெரியாத கவிஞர்கள், எழுதவே தெரியாத கலைஞர்கள், வாயைக் கொடுத்து, முதுகைப் புண்ணாக்கிக்கொள்ளும் தலைவர் - இனி எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கப்போகிறார்கள்! பபூன் மறுத்துவிட்டாரே, இனி நாடகம் எப்படி நடக்கும்! தோல் மறுத்துவிட்டதே, இனி எங்கள் காலுக்குச் செருப்பு எங்கிருந்து கிடைக்கும்! தலையுந் தெரியாமல் காலும் புரியாமல் இலக்கியம் பயிலும் 'தமிழன்குரல்' ஒரே மூச்சாக இப்படி மறுத்துவிட்டால் எங்கள் கதி என்ன ஆவது! அட, தமிழ் நாடுதான் என்ன ஆவது!

ஐயா சிவஞானம்! வேண்டாமையா! உம்மைத் தலைவரென்று கருதுகிற அளவுக்கு அப்பாவிகளாக உள்ள சிலரை எங்களோடு சேர்க்க நீர் மறுக்கலாமா? அவர்களோடு தயவுசெய்து நீரும் இந்தப் பக்கம் வரத்தான் வேண்டும்! இல்லாவிட்டால்-ஐயகோ! என்ன சொல்வேன்; எதிர்கால எக்ஸிபிஷனில் ஒரு ஸ்டரல் காலியாகக் கிடக்குமே.

தோழரே! சிவஞான வீரரே! தி. க, தி. மு. க. அமைப்புகளுக்கு நாட்டில் ஆதரவில்லை என்று குரல் கொடுத்துள்ளீரமே! அடடா! உமது அரசியல் ஞானம் யாருக்கு வரும்! சேச்சே! உமது திறமை இன்னும் உலகத்துக்குத் தெரியாமல் இருக்கிறதே! தமிழ்நாட்டு இட்லியை ஏற்றுமதி செய்கிறவர்கள், தமிழ்நாட்டு மாம்பழத்தைக் கப்பலேற்றி அனுப்புகிறவர்கள், தமிழ்நாட்டுக் குரங்குகளை அமெரிக்காவுக்குத் தள்ளிவிடுகிறவர்கள், உம்மை மறந்துவிட்டார்களே! உலகம் புகழும் அண்ணாத்துரைகூட உமக்கு ஈடாக முடியாதே! அகிலம் முழுவதிலும் வெத்துவேட்டுப் போட்டுக்கொண்டே தலைவர் வேடம் தரிப்பவர் நீர் ஒருவர்தானே! ஓட்டை உடைசல்களை கூட்டிவைத்துக்கொண்டு கம்பீரமாகத் தலைமை வகிக்க உம்மை, சென்னை மிருகக் காட்சி சாலை இன்னும் கவனிக்காமல் இருக்கிறதே, என்னத்தைச் சொல்லி அழுவது!

★

தோழர் சுயப்பிரகாசம் கொஞ்ச நாட்களுக்குமுன்பு ஒரு அதிர்வெடி போட்டார். தி. க. தி. மு. க, மற்றும் மேற்படி சில்லறைக்கழகம் ஆகியவற்றைச் சேர்த்து ஒரு எதிர்க் கட்சி அமைக்கப் போவதாக! இவருக்கு ஏன் இந்த வியாதி என்பதுதான் புரியவில்லை. பச்சரிசியையும் புழுங்கலரிசியையும் சேர்க்கப்போகிறேன் என்பதோடு விட்டிருந்தாலாவது நன்றாயிருந்திருக்கும். கூடக் கொஞ்சம் உமியையும் கலக்கப் போகிறேன என்றல்லவா போட்டுத் தொலைத்துவிட்டார்! சிவஞானமும் அவரது கட்சியும் என்ன எப்படி என்பது நன்கு தெரிந்திருந்தும் எப்படி, சுயம்பிரகாசம் கூசாமல் மேற்படி வார்த்தையைச் சேர்த்தார் என்பதுதான் புரியவில்லை! இதனால் அந்தக் 'கழிபொருட்கள்' யாவும், அடடா, என்ன ஆர்ப்பாட்டம் செய்கின்றன பாருங்களேன்! "நாங்களாவது சேருவதாவது! நாங்கள் நடத்துகிற தொழிலைவிட்டு உங்களோடவா வருவோம்!" என்று ஏதோ நாமே அழைத்துவிட்டதுபோலவும், இந்தப் 'பைசா'க்கள் மறுப்பதுபோலவும் குற்றாலத்திலே சிலது குதிப்பது மாதிரியல்லவோ குதிக்கின்றன! இதற்கெல்லாம் காரணமாக இருந்ததற்காக தோழர் சுயம்பிரகாசம் எவ்வளவு வருந்தினாலும் தகும்! அரசியலிலே ஈடுபாடுள்ள ஒருவருக்கு நாட்டு நடப்பாவது தெரியவேண்டாமா! நாட்டிலே நமக்கும் நமது கொள்கைக்கும் இருக்கும் வரவேற்பையும் மரியாதையையும் நாடு கண்டுகொண்டிருக்கும் தருணத்தில் இவர் போய், 'சேர்த்துவைக்கிறேன்' என்று கிளம்புவதும் அறிக்கை விடுவதும் 'பைத்தியக்கார'த்தனமாகும்! (இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் கோகலே ஹாலில் அழகாகக் குறிப்பிட்டார்கள்!) சுயம்பிரகாசம் போன்ற சட்டசபை உறுப்பினர்கள் கொஞ்சம் பொது அரங்கிற்கு வந்து கவனிக்கவேண்டும். இதோ வரப்போகிறது மாநில மாநாடு! தோழர் சுயம்பிரகாசம் திருச்சி வந்து கவனிப்பாராக! பிறகு அவருக்கே புரியும்! அடடா! இந்தக் கழகத்தையா நாம்போய், பெரியார் ராமசாமிக்காகவே நடக்கும் ஒரு கழகத்தோடும், ஏன் என்று புரியாமலே இயங்கும் ஒரு சில்லறையோடும் ஒட்டவைக்க முயன்றோம் என்று அவரே வருந்துவார்!

★

மனிதனுக்குள்ளே மிருகத் தன்மை ஒண்டிக் கிடக்கிறது. அது அடிக்கடி வெளிக்கிளம்புவது உண்டு. சிலரது மிருகத்தன்மைகள் அப்படியே அந்த மனிதர்களின் மனிதத்தன்மையைக்கொன்று விட்டுப் பரிணமிப்பதும் உண்டு. இப்படி தனி - கலப்பற்ற - மிருககுணம் கொண்டோரில் தலையாவர் - முடிசூடா மன்னர் யாரென்று கேட்டால் ஒரே பதில் சட்டென்று வரும்! அவர்தான் நமது பணக்காரக் கம்யூனிஸ்ட் தினத்தந்தியார்! இவர் நடத்துகிற 'தொந்தி'க்கு அதிகசெல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது, பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்! இந்தச் செல்வாக்கு படிப்படியாக வளர்ந்தால், முடிவிலே ஒருநாள் தமது நண்பர் தமது ஸ்தாபனத்தையே அந்த இடத்துக்கு மாற்றிக்கொண்டுவிடுவார்! இவரை முழுக்க முழுக்க பிறகு கவனிப்போம்!

◎

## தொடர்கதை

### (6-ம் பக்கம் தொடர்ச்சி)

போகிறது; இராசராசனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட மன்னர் நிச்சயித்து விட்டார்; தளநாயகனுக்கும் நந்தினிக்கும் திருமணம் செய்யப் போகிறார்கள் என்றெல்லாம் பேசிக் கொள்ளப்பட்டது.

மங்கை, மரகதம், கோதை, அவர்களைச் சார்ந்த இன்னும் பல பெண்களும் பௌத்த துறவிகளாக மாறி விட்டனர். "புத்தம் சரணம் கச்சாமி--சங்கம் சரணம் கச்சாமி என்று அவர்கள் வாய்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. நாகப்பட்டினத்தில் உள்ள புத்த விகாரத்தில் பிட்சுணிகளாகத் தொண்டு செய்ய அவர்கள் புறப்பட்டு விட்டனர். மன்னனிடம் அவர்கள் விடைபெற்றபோது, இராசேந்திரன், அந்த புத்தர் கோயிலுக்கு சில மானியங்களை விட்டுக் கொடுத்தான். மங்கையும், மற்றவர்களும் மகிழ்ச்சியுடன் அதை ஏற்று, நகரைவிட்டு நீங்கி, நாகப்பட்டினத்தை நோக்கி நடந்தனர்.

அதற்குப் பின் சில நாட்கள் சென்றதும் இராசராசனுக்கும்-இன்பவல்லிக்கும்; தளநாயகனுக்கும்-நந்தினிக்கும் திருமணங்கள் சிறப்புடன் நடந்தேறின. தளநாயகன் சோழநாட்டுப் படைத்தலைவனாக நியமிக்கப் பட்டான். இராசராசனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. பட்டம் சூட்டி முடிந்ததும் இராசராசன் மன்னனின் பிரதிநிதியாக இடைதுறை நாட்டில் தங்கி இன்பவல்லியுடன் நாட்டை ஆண்டு வந்தான். இராசேந்திரனும், அவனுடைய வீரப் புதல்வன் இராசராசனும் தளநாயகனும் ஒன்று சேர்ந்து கங்கைக்கரை வரை சென்று, சோழ ஏகாதிபத்தியத்தை விரிவுபடுத்தி, எதிரிகளைப் புறங்காணச் செய்தனர். தென்னகம் மட்டுமின்றி வடக்கே வங்காளம் வரையிலும், கிழக்கே சாவகம் வரையிலும், தெற்கே இலங்கையிலும், மேற்கே குடகு, கொங்கணம், ஆயிரந்தீவுகளிலும் சோழனின் ஆட்சி விரிந்து படர்ந்திருந்ததாக சரித்திரம் கூறுகிறது.

முற்றும்

வெளிவந்து விட்டது!




முதல் வெளியீடு!!

திருமதி சத்தியவாணிமுத்து

எழுதிய

'எரிக்கப்பட்டாள்'

எனும் வரலாற்று நூல்

(மூவர்ண முகப்புடன்)

விலை ரூ. 1

கழிவு 25 சத வீதம் -

தபால் செலவு இனாம்

மதி மன்றம்,

P. B. No. 1918 சென்னை-1.

புதிய வெளியீடுகள்

ஈழத்துராணி
கவிஞர் கண்ணதாசன்
விலை 1 ரூபாய்

இலக்கியத்தில் காதல்
கவிஞர் கண்ணதாசன்
விலை 1¼ ரூபாய்

கண்மணி
எஸ். எஸ். தென்னரசு
விலை 1 ரூபாய்

இல்லற இன்பம்
அருணன்
விலை 1 ரூபாய்

பெருமைப்பணம்
கவிஞர் கண்ணதாசன்
விலை 1 ரூபாய்

விரைவில் வருகிறது!
கலைஞர் மு. க.
எஸ். எஸ். தென்னரசு

புதுமைப்பெண்
நாஞ்சில் துரைக்கண்ணன்
விலை ரூ 1-12-0

சிப்பாய் முரளி
விகரு. இராமநாதன்
விலை 4 அணு

கிடைக்குமிடம்: அருணோதயம் சென்னை-14

# மக்களும் - - ஆட்சியும்

‘‘நாம், ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று கூறுவது, வடநாட்டவர்மீது நமக்குள்ள விரோதத்தை வெளிப்படுத்தவும், விஷத்தைக் கக்கவுமல்ல; ‘வெள்ளையனே வெளியேறு,’ என்று கூறியபோது, வெள்ளையர் மீதிருந்த வெறுப்பை வெளிக்காட்டவா காங்கிரசார் அவ்வாறு கூறினார்கள்? ‘நிச்சயமாக இல்லை,’ என்று அவர்களே கூறியிருக்கிறார்கள்; ‘இந்தியர்கள் வாழவேண்டும்; அதற்கு வெள்ளையர் வெளியேறியே ஆகவேண்டும்,’ என்று கூறினார்கள்; அதேபோலத்தான், நாம் இன்று, ‘திராவிடர்கள் வாழவேண்டும்; அவர்கள் வாழவேண்டுமானால் வடநர்ட்டவர் வெளியேறியே தீரவேண்டும்,’ என்று கூறுகிறோம்; அப்படிக் கூறுவது எப்படி வடநாட்டவர் மீது நமக்குள்ள விரோதத்தை வெளிப்படுத்துவதாகும்? எப்படி துவேஷமாகும்?

‘‘வெறுப்பையும், விரோதத்தையும் வெளிப்படுத்தத்தான் போகிறோம்; இன்றல்ல; நாம், திராவிடர்கள் வீழ்வதில் தான் அவர்கள் வாழ நினைக்கிறார்கள் என்றால், அன்று நம்மைக் காப்பாற்றிக் கொள்ள, நமக்கு அவர்கள் மீதுள்ள வெறுப்பையும், விரோதத்தையும் வெளிப்படுத்துவோம்.

நான் இன்று அறை கூவிச் சொல்லுகிறேன்-- ‘வடநாட்டவர்கள் நமது கோரிக்கைக்கு பதில் சொல்ல மாட்டார்கள்; அவர்களின் வஞ்சகச் செயலுக்கு அவர்களால் நியாயமான சமாதானம் கூற முடியாது’--என்று!

‘‘எதையாவது பதில் தரலாம் அவர்கள்; ஆனாலும் தரவில்லை. அவர்கள் இந்த மௌனத்திற்கு இங்குள்ள சிலர், ‘பெரிய மனிதத் தன்மை’ கற்பிப்பார்கள்--கற்பிக்கக் கூடும்; ஆனால், அந்தப் ‘பெரிய மனிதத்தன்மை, ஜனநாயகத்திற்கு ஒத்துவராதது,’ என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

‘‘அந்த நாட்களில் இரு வகையான ஆட்சிதான் உண்டு--‘நல்ல ஆட்சி; கெட்ட ஆட்சி’--ஆனால், இன்று பலவகையான ஆட்சிகள் உண்டு; அந்த வகையில் ஒரு வகையான ‘தாசர்’கள் ஆட்சிதான் இப்போது சென்னை மாநிலத்தை ஆட்சி புரியும் காமராசர் ஆட்சி. நான், சென்னை சர்க்கார் ஆட்சியை, ‘தாசர்கள் ஆட்சி’ என்று, நூற்றுக்கு நூறு--இலக்கண சுத்தமாக நிரூபிக்க முடியும்.

‘‘விவசாயப் பண்டங்களின் விலை வீழ்ச்சி, உடனே விவசாயிகளின் கடன் தொல்லை--இப்படிப்பட்ட பிரச்சினைகளா? வடநாட்டிற்குக் காவடி எடுக்கிறார்கள்.

‘‘அப்படியானால், இந்த இலட்சணத்தில் இருக்கும் ஒரு ஆட்சியை ‘தாசர்கள் ஆட்சி’ என்று கூறாமல் வேறெப்படி கூறுவது? வடநாட்டு சர்க்காருக்கு வரி வசூலித்துத் தரவும், அவர்கள் சொற்படி தலையாட்டவும் இருக்கிற ஆட்சிதானே சென்னை சர்க்கார் ஆட்சி?

‘‘அரசியல் தெரிந்தவர்களைக் கேட்கிறேன்--சென்னையில் ஒரு கவர்னர் இருப்பது எந்த ஜனநாயக மரபை ஒட்டியது? உலகத்தில் விடுதலை பெற்ற நாடுகள் பல இருக்கின்றனவே, அங்கெல்லாம் இங்கிருப்பதைப் போன்ற கவர்னர் இருக்கின்றாரா? இங்கிலாந்திலோ, ரஷ்யாவிலோ உண்டா? அமெரிக்காவில் உண்டு; ஆனால், ஐசனோவரால் நியமிக்கப்பட்டவர்களல்லர்; 48 மாநிலங்களிலும் உள்ள மக்கள், அந்த அந்த மாநிலத்திற்கான கவர்னர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்; ஆனால், இங்கு, பிரகாசா, இராசேந்திரபிரசாத்தால் நியமிக்கப்பட்டல்லவா இருக்கிறார்? இந்த ‘முறை தவறிய’ முரண்பாடு, வேறெந்த நாட்டு அரசியலில் இருக்கிறது?

‘‘இப்படி நியமனம் பெறுகிற மக்களுடன் தொடர்பில்லாத கவர்னர், கையெழுத்திட்டால்தான், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய சபையின் முடிவுகள் அமுல் செய்யப்பட வேண்டும் என்றிருப்பது, எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது?

‘‘இந்த நிலையில், இந்த நாட்டு மக்களான திராவிடர்கள், வடநாட்டவரால் ஆளப்படுகிறார்கள்; அந்த வடநாட்டு ஆட்சியாளருக்கு ‘சேவா சிம்மங்’களாக-எடுபிடிகளாக இநத நாட்டில் சிலர் இருக்கின்றனர்; இந்த எடுபிடிகளின் பிடியிலிருந்தும், வடவர்களின் பிடியிலிருந்தும், திராவிடர்கள் மீளுவதற்கு வழி என்ன என்பதை திருச்சியில் கூடும் மாநில மாநாடு முடிவு செய்யும்.

‘‘அந்த முடிவு, ஒரு பெரும் ஜனநாயக அடிப்படையில் எடுக்கப்படும்-என்று, நமது அண்ணா அவர்கள் சென்ற வாரம் அறிவித்தார்கள்; எந்தக் கட்சிக்குவரும் இந்தத் துணிவு--இந்த நாட்டில்?

‘‘கம்யூனிஸ்டுகள் மாநாடு--மக்களுக்கும்; மாநாட்டிற்கும் சம்மந்தமிருக்காது; காங்கிரஸ் மாநாடும் அப்படியே; ஆனால் நமது மாநாடு?

‘‘நாம் நடத்தும் மாநாடு மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியான முடிவுகள், இந்தத் தென்னாட்டின் அரசியல் வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தைத் துவக்கும்; அந்த அத்தியாயம், இந்த நாட்டு மக்களுக்கான ஆட்சி அமைப்பதைப் பற்றியதாயிருக்கும்.’’

--5-6-55 கோகலே மன்றத்தில்

ஈ. வி. கே. சம்பத்.

# நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்த காலை
மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன் காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத் தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்திலேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

## புதுமைப்பெண்

ஆசிரியர்: நாரணதுரைக்கண்ணன்
வெளியீடு: அருணோதயம்
40. பீட்டர்ஸ்ரோடு சென்னை 14.
விலை. 1-12-0

நாவல் உலகில் பெயர்பெற்றவராவார் நாரணதுரைக்கண்ணன் அவர்கள். எண்ணத்தை வடித்துக் காட்டுவதிலும், நெஞ்சில் பட்டதை அப்படியே ஒளிவின்றிக் கூறுவதிலும், துணிவுமிக்கவர் இந்நூலாசிரியர். ‘புதுமைப்பெண்’ காலம் கடந்து வெளிவந்தாலும், என்றும் சாகாத கருத்துக்களை வைத்து ஜீவா அவர்கள் ‘புதுமைப் பெண்ணை’ உருவாக்கியிருக்கிறார். புத்தகத்தை எடுத்தவர்கள் அதைக் கீழே வைக்கமாட்டார்கள்; உள்ளும் புறமும் அப்படி அமைந்திருக்கிறது. புதுமை மலர, அதுவும், பெண்ணினம் விடுதலைபெற ஆசிரியர் விரும்பும் மாற்றங்கள் நூலில் எங்கெனும் மிதக்கின்றன. புதுமைப் பெண் சுவைமிக்க நாவல்-படிக்க வேண்டிய புத்தகம்.

★

## எரிக்கப்பட்டாள்

ஆசிரியர்: சத்தியவாணிமுத்து அம்மையார்
வெளியீடு: மதிமன்றம் சென்னை 1.
விலை ரூ. 1-0-0

வீரமங்கை ஜோனின் புனிதமான வரலாற்றை தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் அழகுபடத் தீட்டியிருக்கிறார்கள். நடையிலே உயிரோட்டமிருக்கிறது. ‘‘எரிக்கப்பட்டாள்’’ எங்கும் வரவேற்கப்படுவாள் என்பதை, புத்தகத்தின் முதல் அத்தியாயத்தைப் படித்தாலே புலப்பட்டுவிடுகிறது.

★

## பாரதிதாசன் கதைகள்

ஆசிரியர்: புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
வெளியீடு: ஞாயிறு நூற்பதிப்பகம், புதுவை.
விற்பனை உரிமை: முரசொலிப் பதிப்பகம், 131, பிராட்வே, சென்னை 1.
விலை ரூ. 1-4-0

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய கதைகளின் தொகுப்பே ‘‘பாரதிதாசன் கதைகள்’’ கவிஞரவர்களின் கதைகளில் நகைச்சுவை மிகுந்து தென்படுகிறது; சிரிக்கவைத்து சிந்திக்க தூண்டுகிறார். மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்கவேண்டிய நல்ல அறிவாற்றல் மிக்க கதைகளை கவிஞரவர்கள் எழுதியுள்ளார்கள். ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதத்தில் உயர்ந்து காணப்படுகிறது. கதைகளில் எந்தக் கதை சிறந்த கதை என்று அறிய முடியவில்லை. பயனுள்ள புத்தகம். பதிப்பும் அழகாக இருக்கிறது.

★

## வீரபாண்டியன் கட்டபொம்மன்

ஆசிரியர்: சுப்பு ஆறுமுகம்.
கிடைக்குமிடம்: கலைமன்றம், சென்னை-1.
பிரதி விலை ரூ. 1-0-0

இந்திய துணைக்கண்டத்தில் முதன் முதலாக விடுதலைக்குரல் எழுப்பியது வீரபாண்டிய கட்டபொம்மன் தான். அவ்வீரர் குலத் தலைவனைப் பற்றி தோழர் சுப்பு ஆறுமுகம் மிகவும் நன்றாக எழுதியுள்ளார். அம்மாவீரனின் உண்மை வரலாற்றை ஆராய்ந்து, எழுதிய சுப்பு ஆறுமுகம் அவர்களை நாம் பாராட்டத்தான் வேண்டும். பலர் பற்பல விதமாக வீரபாண்டியனைப் பற்றி எழுதியுள்ளனர். சுப்பு ஆறுமுகம் பாண்டியன் வரலாறறில் புதிய கண்ணோட்டத்தைச்செலுத்துகிறார்.

★

## முசோலினி

ஆசிரியர்: V. சிவப்பிரகாசம் B. A.
கிடைக்குமிடம். நீலா நிலையம், 2-127, மவுண்ட்ரோடு, சென்னை-6.
பிரதி விலை ரூ. 0-10-0

துருக்கியத்தந்தைமுஸ்தபாகமால் பாட்சாவைப் பற்றி நூல் வடிவாக சிறந்த முறையில் எழுதி, எல்லோராலும் பாராட்டப்பட்ட நண்பர் சிவபபிரகாசம் ‘‘முசோலினி’’ என்ற நூலையும் எழுதியுள்ளார். முசோலினியின்வரலாற்றைவிளக்குவதின்மூலம் அரசுபீடங்களில் முசோலினி போன்றவர்கள் தோன்றக்கூடாது என்ற ஆசையை ஆசிரியர் இந்நூல்மூலம் தெரிவித்திருக்கிறார். முசோலினியைப் பற்றியுள்ள வரலாறு சுவைபட அமைந்திருக்கிறது. இநநூலில். எதேச்சாதிகாரம் சுயநலம், பதவி வெறி, கொடுங்கோன்மை ஆகியவைகளின் கூடாரமாக-முசோலினியின் ‘மறு பிறவிகளாக’ உலவ முற்படுவோருக்கு இந்நூல் ஓர் அபாய அறிவிப்பு எனலாம்.

அருள்மணியன்

## அறிவிப்பு

பன்மொழிப்புலவர் அப்பாதுரை அவர்களின் உடல்நலக் குறைவால் இநத இதழில் ‘சிலம்பு வழங்கும் செல்வ’மும், ‘கேள்விப்பெட்டி’யும் இடம்பெறவில்லை. வழக்கம்போல அடுத்த இதழில் தொடங்கப்பெறும்.

ஆ—ர்.

## கண்ணீர்...

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

நான் சாகிறேன்-என் கருவுடன், நீங்கள் நிம்மதியாக வாழ!

உங்கள் அன்புள்ள,
குமுதம்

குமுதம் கண்ணீர்விட்டுக் கடிதம் எழுதிய அதே நேரத்தில், சந்திரனும் வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டு அவன் மனைவி குமுதத்துக்கு ஒரு கடிதம் எழுதினான். இதோ!

............, அன்பு முழுவதும் என்னிடமே கொட்டி; அதனாலேயே வாழ்க்கையைப்பாழாக்கிக்கொண்ட குமுதாவுக்கு;

என்னுடைய கடைசிக் கடிதத்தில் நான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால், நல்லவனைக் குற்றவாளியாக்குவது சந்தர்ப்பம் தானே?

உன் அக்கா செந்தாமரை மிக நல்ல பெண். ஆனால், ஒரு பெண் நல்லவளாய் இருப்பது மட்டும் கணவனைத் திருப்திப்படுத்தப் போதுமா? நான் செந்தாமரையைத் திருமணம் செய்துகொள்ளு முன்பே, என் வருங்கால மனைவி எப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தேன். எத்தனையோ முறை அப்படி ஒரு பெண்ணுடன், கற்பனையுலகில் அளவளாவி மகிழ்ந்திருக்கிறேன். நான் கண்ட 'இலட்சிய மனைவி' என் வாழ்க்கையில் கிட்டாமல் போய்விட்டாள் என்பதை எண்ணிய போது, என் உள்ளம் உடைந்தே போய்விட்டது!

செந்தாமரையும் நானும் மணவாழ்க்கையைத் துவங்கினோம். தனியாக விடப்பட்ட புதுமணமக்களிடம் நிலவ வேண்டிய சல்லாபஉணர்ச்சி எங்களிடம் கொஞ்சம்கூடத் தலைகாட்டவில்லை. அதுதான் போகட்டும், செந்தாமரை ஒரு நாளாவது மலர்ச்சியுடன் பேசியிருப்பாளா? வேலைக்குப் போய் அலுத்து வீடு திரும்பும்போது 'புன்முறுவல்' என்னை வரவேற்காது! அவள் ஏன் அப்படி இருக்கிறாள் என்பதை அறிய எவ்வளவோ முயன்றேன். அவளை மகிழ்விக்க என்னாலான முயற்சிகளெல்லாம் செய்தேன். ஒன்றும் பலனளிக்கவில்லை. வாழ்க்கையே எனக்கு அவிழ்க்கமுடியாத ஒரு புதிராகத் தோன்றியது.

மனிதன் எவ்வளவுமுயன்றாலும் 'வாழ்க்கை ஒரு சூதாட்டமாகத்தான்' போய்விடுகிறது! செந்தாமரையை மனைவியாக ஏற்றுக்கொண்டபொழுது நான் ஒரு பெரிய தவறு செய்துவிட்டேன். அவளைத் திருமணம் செய்துகொண்ட சில மாதங்களிலேயே எனக்கு இல்லறத்தில் வெறுப்பேற்பட்டது. இந்த நிலையில்தான், முதல் முறையாக, செந்தாமரையோடு நான் உங்கள் ஊருக்கு வந்திருந்தபொழுது, உன்னைத் தனிமையில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அமாவாசை இரவில் திரிந்தவன் பௌர்ணமி நிலாவைக் கண்டால் அனுபவிக்காமலா இருப்பான்? தாகத்தால் தவிப்பவன் தண்ணீரைக் கண்டவுடன் அருந்துவதற்குத் தயங்குவானா? அல்லது பிறர் அனுமதிக்குக் காத்திருப்பானா? வெய்யிலில் அலைந்து அலுத்தவன் மரநிழலைக் கண்டால் விரைந்து ஒதுங்கத்தானே செய்வான்? செந்தாமரை எனக்கு அமாவாசை இரவாக, தாகம் தீர்க்க முடியாத பாணமாக, கோடை வெய்யிலாக இருந்தாள். அவளிடம் அலுத்துப் போன நான், அவளைவிட வசீகரமும், சரளமாகப் பழகும் சுபாவமும் உடைய உன்னைக் கண்டபோது, உள்ளத்தைப் பறிகொடுத்தேன். நீ தண்மை பொருந்திய நிலாவாகத் தோன்றினாய்; தாகம் தீர்க்கும் பானமாக்கிக்கொள்ள விரும்பினேன். உன் நிழலில் ஒதுங்கினேன்! செந்தாமரையிடம் பெறத்தவறியதை ஆனால், அவளிடம் மட்டுமே பெறுவதற்கு உரிமையுடையதை-உன்னிடம்தான் பெறமுடிந்தது!

குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் கோளாறுகளுக்குக் கணவன், மனைவி இருவருமே பொறுப்பாளிகள். ஒருவரை மட்டும் குற்றவாளியாக்குவது அறிவீனம். உனக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு செந்தாமரைக்குத் தெரியுமேயல்லாது, அதற்கு அவள் போக்குத்தான் காரணம் என்பதை அவள் அறியாமல் போனது விந்தைதான்!

உன்னைப் பிரிந்து இளம்ப மனமில்லாமல் ஊருக்குக்கிளம்பினேன். செந்தாமரையிடம் எனக்குஏற்பட்ட வெறுப்பும், உன்னிடம் தோன்றிய வெறியும் என்னை மிருமாக்கி வைத்திருந்தன. பற்றுக்கோடில்லாமல் ஆடிக்கொண்டிருக்கும் கொடி, பக்கத்தில் கிடைக்கும் கொம்பினைப் பற்றிப் படருவதுபோல, என் இதய இச்சையும் 'சோபனா' என்ற வடநாட்டு வேசிப்பெண் விரித்த வஞ்சக வலையில் விழுந்தது! அவள் உறவால் நான் செந்தாமரையை அடியோடு மறந்தேன். செந்தாமரை அவள் விதைத்த விதைகளின் பலனை அறுவடை செய்துகொண்டிருந்தாள்!

செந்தாமரை அவள் கடமையில் தவறினாள்-என்னையும் தவறச்செய்தாள்! சோர்ந்துபோன அவள் இதயம் அவள் உடலில் நோயைப் பரவவிட்டது. நோய் வளர வளர அவள் உடல் மெலிந்தது; என் உதாசீனம் சீக்கிரம்அவள்உயிருக்கு உலை வைத்துவிட்டது.

இந்த நிலையில் நீ என்னைத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிப்பதாக, உன் அப்பா கடிதம் எழுதினார். மீண்டும் உன் நினைவு என் உள்ளத்தில் எழுந்தது. திருமணத்துக்குச் சம்மதித்தேன். ஆனால், என் முடிவிற்குக் காரணம் உன்மீதுள்ள காதலல்ல; என்னுடைய சிருங்கார விளையாட்டுப் பொம்மைகளில் நீயும் ஒருத்தியாக இருந்துவிட்டுப் போகட்டுமே என்றுதான்!


இயலிசை நாடகக் கழகம்
சென்னை-2.

இரண்டாவது காணிக்கையாக
அளிக்கும்

**தேவாலயம்**

எஸ். எஸ். தென்னரசு

நடிகர்கள் :
அ. பொ. அரசு, டி. கணேசன், ஏ. சி. சேகர், ராமையா, நரசு, தமிழ்ப்பித்தன், ராஜாராம், அருணசலம், குமார்.

பாடல்கள் :
கண்ணதாசன்,
சுப்பு ஆறுமுகம்

கலை அமைப்பு
ஏ. சி. சேகர்

இசை : நரசு:

டைரக்ஷன்
டி. கணேசன்


ஆனால், 'சோபனா' நம்முடைய திருமணத்துக்கு எவ்வளவோ முட்டுக்கட்டை போட்டாள். இந்தத் திருமணத்தின்மூலம் நிறைய சொத்து எனக்கு வரப்போகிறதென்று அவளிடம் புளுகினேன். நம்பிவிட்டாள். வேசிக்கு அன்பும், பாசமும் ஏன்? காசுதானே அவளுக்கு வேண்டியது!

நீ என் 'குடும்ப விளக்காக' வந்தும்கூட, உன் அழகு என் இதயத்தைத் தொடவில்லை. தாசியினுடைய வேஷம்தான் என் மனத்தைக் கவர்ந்தது! செந்தாமரை கசந்தபோது நீ எனக்கு எட்டாக் கனியாகத்தான் இருந்தாய்; நானும் உனக்காக ஏங்கினேன். ஆனால், உன்னுடையவளாக நீ என் கையில் கிடைத்தபோது. உன்னைச் சுவைக்கும் மனநிலையில் நான் இல்லை......!

செந்தாமரையால் மூடப்பட்ட என் இதயக் கதவை, நீ ஒருத்திதான் திறக்கமுடிந்தது. ஆனால், நீ உள்ளே நுழையுமுன், 'சோபனா' உள்ளே நுழைந்து நீ மீண்டும் திறக்க முடியாதபடி பூட்டிக் கொண்டுவிட்டாள் அவள் சாகசத்தால்!

குமுதா, நிச்சயம் உனக்கு நான் மன்னிக்கமுடியாத தவறிழைத்துவிட்டேன். பழைய தெருக்கூத்துக்களில் வரும் 'கோவலன்' நிலையில்தான் நான இப்பொழுது இருக்கிறேன். ஆனால், அந்தக் 'கோவலனுக்கு' மீண்டும் கண்ணகியிடம் வரும் மனத்திராணி இருந்தது. ஆனால், எனக்கோ......

தமிழ்க்குலப் பெண்ணாகிய உன்னுடைய மனத்தின் ஒரு மூலையில் உன் கணவனாகிய எனக்குஇன்னும் இடம் இருக்கலாம்-நீ என்னை மனமார விரும்பலாம்! ஆனால், நானே என்னை வெறுக்கும்போது.........? ......நான் போகிறேன்; எங்கே போகிறேன் என்று எனக்கே தெரியாது. ஆம், முடிவில்லாத பயணத்தைத் துவங்கிவிட்டேன்!

குமுதா - உன்னைத் திருமணம் செய்துகொண்ட பிறகுஇப்பொழுதுதான் அந்தப் பெயரை முழு ஆசையோடு உச்சரிக்கிறேன் - உன்னிடமிருந்து விடைபெற்றுச் செல்லும் இந்த நேரத்திலாவது என்னை மன்னித்துவிடு. ஆனால் ஒன்று-கட்டாயம் நீ வாழவேண்டும். உன் கருவில் உருவாகும் குழந்தைக்காகவாவது நீ வாழத்தான் வேண்டும்! இந்த நிலையில் உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள விரும்பும், எந்த வாலிபனையும் நீ மணக்க, நான் என் மனப்பூர்வமான சம்மதத்தை அளிக்கிறேன். அதுவே நான் கடைசியாகத் தேடும் கழுவாய்!

உன்........,
சந்திரன்

குமுதத்தின் கடிதத்தைப்பூட்டிய கதவு வரவேற்றதுபோல்' சந்திரனின் கடிதத்தைக் குமுதத்தின் சடலம் வரவேற்றது. காலந்தவறி எழுதப்பட்ட அந்த இரண்டு கடிதங்களும், அவைகள் எழுதப்பட்டதன் நோக்கம் நிறைவேறாமல், உலகுக்கு சோகக்கதையொன்றை சொல்லிக்கொண்டிருந்தன!


தென்றல்

அடுத்த இதழில்!

★

'ராஜ தண்டனை'

கண்ணதாசன்
எழுதும்
காதற் சித்திரம்

★

**அவள்**

இன்பவல்லி! இசையரசி! இடுக்கண் விளைவிப்போரின் துடுக்கை அடக்கும் வீரமன்னனின் வாரிசுக்கோர் திருவிளக்கு!

**அவன்**

கவிக்குயில்! புவியாண்ட புரவலர்களின் புகழுரை பெற்ற புரட்சிப்புலவன்! கற்றவர்க்குக் கனிரசம்; மற்றவர்க்கு கடுவிஷம்.

**அவர்கள்**

காதல் கானம் இசைக்கும் வானம்பாடிகளாயினர். வழியிலே, வான வெளியிலே கழுகுகள் வழிமறிக்கின்றன.

முடிவு?

மறவாதீர்

அடுத்த இதழில்!

# வெண்பாப் போட்டி

## 8 நாதத்தில் இல்லை நயம் !

வெண்பாப்போட்டி 8-ன், பரிசுபெற்ற வெண்பாக்களும், பிரசுரத்திற்கு தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழில் பிரசுரமாயின ; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

செந்தமிழின் தன்சுவையை சேர்த்துக் குழைத்தளிக்கும்
பைந்தமிழ்ப் பூங்கொடியே ! பண்பாடாய்-செந்திருவே
பேதமிலா நல்யாழின் பேதறுநின் பண்ணின்றேல்
நாதத்தில் இல்லை நயம் !

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

★

பொன்னென்று சேயைப் போற்றிடு வாளந்த
இன்னிசையாந் தாலாட்டுக் கீடுண்டோ ?--தென்னாட்டு
மாதர்களின் சொல்நயம்போல் மாநிலத்தில் வீணைதரு
நாதத்தில் இல்லை நயம்!

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

சிறகொடிந்து வாழும் சிறுபறவை போல
திறமிழந்து பெண்கள் திரிதல்--சரியாமோ ?
கோதிப்பார் கோதையே, தந்தி அறுந்தயாழ்
நாதத்தில் இல்லை நயம் !

—சா. பில்லப்பன், பாகனேரி.

★

காதல் பயின்றாள் ; அக் காதலனைக் காணமல்
நாதக் கலையாழ்மேல் கைதழுதாள் !--மாதரசி
கீதத்தி லேயிருந்த சோகத்தா லந்நரம்பின்
நாதத்தில் இல்லை நயம் !

—இரா. அன்புரையன், அம்மையப்பன்.

★

" காரிகையாள் கட்டழகி கண்ணாளன் தானிழந்தால்
பாரிலிவள் துன்பத்தைப் பாகாக்கி--பாரித்துப்
பேதத்தில் பண்பாடும் பேருற்ற வீணைதன்
நாதத்தில் இல்லை நயம் !

—வித்துவான் செ. வரதராசனார், உளுந்தூர்ப்பேட்டை.

★

கண்ணல்ல ! எந்தன் கருத்தில் புகுந்தநற்
பெண்ணல்ல ! உந்தன் மழலைச்சொல்--பண்ணுள்ள
நாதத்திற் கீடாக, நல்யாழ் நரம்பொலி
நாதத்தில இல்லை நயம் !

—எம். ஆர். ஜி. இராசாம்பாள், திருச்சி.

★

உம்பருக் கில்லை உயர்வணக்கம் ; தன்மானம்
கம்பருக் கில்லை ; கலைஞர்க்குக்--கொம்பில்லை ;
வேதத்தில் இல்லை விழுப்பமே ; பண்ணற்ற
நாதத்தில் இல்லை நயம் !

—சு. குப்பண்ணன், பெங்களூர்.

★

பெற்றவர்க்குத் தங்குழவி பேசும் மழலைமொழி
உற்றசெவி உள்ளூர ஊடுருவி--மற்றுமுடல்
சோதிக்கு மின்பம்போல் சொல்லும குழல்யாழின்
நாதத்தில் இல்லை நயம் !

—கா. நா. விசயராகவன், துறையூர்.

★

செய்ய குறளும் சிலம்பும் அமுதத்தேன்
பெய்ய வளர்ந்த பெருந்தமிழே !--வையத்தில்
ஓதப் படுமொழிபல் லுண்டெனினு முன்போலக்
நாதத்தில் இல்லை நயம் !

—தமிழ்நேயன், நாச்சியாபுரம்.

இல்லாரை யாக்கி இரந்துண்ண வைத்திட்ட
பொல்லாத ஆண்டவனைப் போற்றிடும்--சொல்லில்
பேதமுடைக் கள்வர் பெருமையோ டாக்கிவைத்த
நாதத்தில் இல்லை நயம் !

—சு. கவிதைப்பித்தன், வத்தலக்குண்டு.

★

அன்றொருநாள் நீயென்னை அன்புடன் அத்தானே
என்றாய் எனதுள்ளம் பேரின்பம்--கொண்டேன்பின்
காதலியே ! யாழ்தன்னில் கானம் இசைத்தாயக்
நாதத்தில் இல்லை நயம் !

—வெ. வெங்கடசாமி, பாலையம்பட்டி.

★

எண்ணத்தி லூறி எழுமோசை சொல்லாகி
வண்ண எழுத்தாய் வகுப்பதினால்--என்னபலன்
சேதமிலாச் செய்கை செயல்பட மாட்டார்வாய்
நாதத்தில் இல்லை நயம் !

—இல. சேதுரர்மன், கரூர்.

★

" தங்கச் சுரங்கமாம் சங்கத் தமிழினைப்
பங்கமற நன்றாய்ப் படித்துணர்ந்தே--மங்கையே
வேதத்தில் இல்லை விழுப்பொருள் ; வீணையின்
நாதத்தில் இல்லை நயம் !

—இரா. ப. மனோகரன், மதுரை.

★

ஈகை யறமோம்பி ஈந்துவந்த தண்டமிழர்
சாகாத பண்பெங்கே ? சாகின்றோம்--மேகலையே !
ஏதமிலா நல்வயிறு ஏங்கித் தவிக்கையிலே
நாதத்தில் இல்லை நயம் !

—கு. இராமதேவி, சென்னை-1.

★

இடையிருப்பேன் என்று இருங்கூந்தல் ஏறும்
அடைமலரில் ஊதும் அரளியே--குறையிலென்
காதலியின் சொற்கேட்டும் கத்துவதேன் ? நீபாடும்
நாதத்தில் இல்லை நயம் !

—" காமு ", வேலூர்.

★

நீங்கினான் கொண்கன் நிலையில் பொருளீட்ட ;
ஏங்கினாள் நங்கையும் ஆளனின்று ;--பாங்கியரும்
வேதனையில் பங்கெடுத்து வாட்டமுடன் யாழ்மீட்ட
நாதத்தில் இல்லை நயம் !

—" இளமுருகு " அருப்புக்கோட்டை.

★

கன்னித் தமிழ்மொழியில் கன்னல் சுவையுண்டு
உன்னி உணர்நயமும் உண்டாமால்--இன்றுபேச
நாதியற்று போனவந்த ' நல்ல ' வடமொழியின்
நாதத்தில் இல்லை நயம் !

—கி. சீதாராமன், கரிகாலி.

★

வாதாக்காவ லானை வழிவழி போற்றியுமே
போதனைசொல் ஓர்மகன் போனபின்னர்--பேதமற்றாள்
வேதனையால் நொந்து விடுகின்ற மூச்சினது
நாதத்தில் இல்லை நயம் !

—பி. பழனியப்பன், திருச்சி.

★

உண்ண வுணவும் உடுக்க வுடையுமின்றி
மண்மீதில் சாயும் மனிதருக்குப்-பண்ணமைத்து
காதலைத் தூண்டுதற் கான மகரயாழின்
நாதத்தில் இல்லை நயம் !

—எஸ். தேவராசன், சென்னை-21.

★

தேங்கொம்புத் தீஞ்சுவையில் தேர்ந்தவர் தேருதற்குத்
தீங்கரும்பில் உண்டோ தீஞ்சுவை !--பூங்குழலே !
சீத மழலையைச் சென்னிவரை கொண்டோர்க்கு
நாதத்தில் இல்லை நயம் !

—ச. தங்கவேலு, பந்தல்குடி.

★

காலை யெழுந்து கலப்பைப் பிடித்துநன்
மாலை முடியவே லைசெய்து--வேலையின்
வேதனையால் பாட்டாளி வெந்து விடுமூச்சு
நாதத்தில் இல்லை நயம் !

இரா. தியாகராசன், திருச்சினாப்பள்ளி.

தந்தி. "ராஜா". போன் நெ 268



**சங்ககால மங்கை!**

சங்ககால மங்கையர் கச்சணிந்து கூந்தலுக்கு சந்தனப் புகையும், அகிற்புகையும், ஊட்டி அதைப் பின்னி விட்டிருப்பர். காதில் குழை; கழுத்தில் ஆரம்; கைகளில் ஆம்பல் தண்டால் செய்த தொடி; விரல்களில் மோதிரம இடையில் மேகலை; காலில் நூபுரம்; சதங்கை முதலிய அணிகள் பூண்டிருந்தனராம்!"

உயர்ந்த நகைகள் - நாணயம் - நம்பிக்கை
இதற்குச் சிறந்த இடம்

**பி. ஏ. ராஜு செட்டியார்**
சுவர்ண மாளிகை!

**வைரம், தங்கம், வெள்ளி, நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் கிடைக்கும் இடம்**

Anand

# பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்
## சுவர்ணமாளிகை, கோயமுத்தூர்.


Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14..

19832